Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Thirumurugan Com Net
திருமுருகன் கொம் நெற்
WESTERN UNION Money Transfer
Fed
Inland & I.D.D Calls, Internet-Browsing & E-mail, Fax, Photo Copy, Computer typing & Printing, Designing-Cards, Laminating, CD-Writing, Binding, Parcel Services, Bus-Van-Flight Ticketing Services, & Computer-Hand phone Accessories,
259, K.K.S.Road Jaffna. Tel - 021 222 3958 Fax - 021 222 7836
E.mail thirumuruglanet@yahoo.com
46, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. Tel - 021 222 7560 Fax - 021 222 7340

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2036 தை - 15 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஜ் 17 (28.01.2005) வெள்ளிக்கிழமை இதழ்: 120

# குடியிருப்பு - தொழில் வசதியை வழங்கும் புறநிலையை உருவாக்கித் தருவோம்!

## சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களிடம் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் உறுதி!

(முல்லைத்தீவு)

சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களை பொருத்தமான இடங்களில் குடியமர்த்தவும் மீண்டும் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவும் விடுதலைப் புலிகள் இயக்கம் முழு மூச்சுடன் செயற்பட்டு வருகிறது.

சர்வதேச நாடுகளுடன் பேசி நிதியுதவிகளைப் பெறுவதற்கான புற நிலைகளை எமது இயக்கம் நிச்சயம் உருவாக்கித்தரும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் உரையாற்றும்போது உறுதியளித்தார்.

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் தங்கியிருந்த மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது -

(02 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் விமானங்கள்; நோர்வேயிடம் முறைப்பாடு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் இரண்டு விமானங்கள் இருப்பது தொடர்பாக இலங்கை அரசாங்கம் நோர்வே அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதாகத் தெரியவருகிறது.

இரணைமடுப் பகுதியில் உள்ள விமான ஓடுபாதையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இரண்டு விமானங்கள் தொடர்பாக - வேவு விமானம் எடுத்த புகைப்படங்களும் நோர்வேயிடம் கையளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு ஒற்றை இயந்திர விமானமும், இரட்டை இயந்திர விமானம் ஒன்றும் இரணைமடு ஓடுபாதையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை வேவு விமானம் படம் பிடித்திருப்பதாகவும், இது புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு முரணானது என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.(01)

## வெளிநாட்டு உதவிகள் குறித்து அரசு - புலிகள் இன்று பேச்சு

### ஏ.பி.செய்திகள் தெரிவிப்பு

(கொழும்பு)


விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை, வெளிநாட்டு உதவிகள் மூலம் எவ்வாறு கட்டியெழுப்பலாம் என்பது தொடர்பாக அரசாங்க மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கிடையில் முதற் தடவையாக இன்று கொழும்பில் நேரடிப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாக ஏ.பி. செய்திகள் தெரிவித்தன.

அரச தரப்பு பிரதிநிதிகளுடன் இன்று நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கொழும்பு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீள்கட்டுமானம் செய்வதற்கு, மாவட்ட, பிராந்திய மற்றும் அரசியல் ரீதியாக மூன்று பிரிவுகளை அமைக்கவேண்டுமென அரசாங்கத்தை விடுதலைப்புலிகள் வற்புறுத்தியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அன்ரன் பாலசிங்கம் பார்வையிட்டார்!



(கிளிநொச்சி)

சுனாமி அனர்த்தத்தால் முல்லைத்தீவு மற்றும் வடமராட்சி கிழக்கு கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட அழிவுகளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன்பாலசிங்கம் மற்றும் அடேல் பாலசிங்கம் ஆகியோர் நேரில் பார்வையிட்டு அப்பகுதி மக்களுக்கு ஆறுதல் கூறினர்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில், முல்லைத்தீவு கடற்கரையோரப் பகுதிகளுக்கு - கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை சகிதம் சென்ற இவர்கள், முதலில் முல்லைத்தீவு கடற்கரையில் சேதமடைந்திருந்த கிறிஸ்தவ தேவாலயப் பகுதிகளைப் பார்வையிட்டனர்.

பின்னர் வட்டுவாகல் பகுதியில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்ட கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தம்பதிகளுக்கு - அங்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை விளக்கமளித்தார்.

சுனாமியால் பெரும் சேதமுற்ற செந்தளிர் சிறுவர் இல்லத்தையும் பார்வையிட்ட இவர்கள், இடம் பெயர்ந்த மக்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணக் கட்டமைப்பு தொடர்பாக புலிகளுடன் உடன்பாடு இல்லை!

### லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச சமூகம் வழங்கும் உதவிகளை, பகிர்ந்தளிப்பதில் விடுதலைப் புலிகள் நேரடியாக பங்குபற்றமுடியாதென, இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்த நிவாரண உதவிகளைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே எந்தவித உடன்படிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் இது தொடர்பாக எவ்வித இறுதிமுடிவும் இரு பகுதிகளிலும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஆனாலும் இது தொடர்பாக படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டுவருகின்றது.

தற்போது எமது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் நாம் பணிபுரியவேண்டியுள்ளது. சில சமயங்களில் விரும்பாதவர்களுடன் இணைந்தும் பணிபுரியவேண்டிவரும். நாம் ஒரு நடைமுறை விடயத்தை உருவாக்கமுடியாமல் உள்ளோம். எமது கலந்துரையாடல்கள் நடைமுறைக்குச் சாத்தியமானவையாக இருக்க வேண்டுமென அவர் தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் உரை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரோக்கியோ நிதியுதவியின் ஒரு பகுதி வட - கிழக்கு பகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படும்!

### பிரஸல்ஸ் மாநாட்டில் அகாஷி

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இணங்கிய நிதி உதவியில் ஒரு பகுதியை சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு வழங்குவதற்குத் தீர்மானித்திருப்பதாக இலங்கைக்கான ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் இடம்பெற்ற உதவி வழங்கும் மாநாட்டில் இலங்கைக்கு 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்குவதற்கு சர்வதேச நாடுகள் இணங்கியிருந்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை பிரஸல்ஸில் இடம்பெற்ற நிதியுதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் போதே இலங்கைக்கு வழங்கவுள்ள இந்த நிதியுதவி குறித்து மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைக்கான ஜப்பானியப் பிரதிநிதி யசூஷி அகாஷி இவ்வாறு தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் உட்பட பல நாடுகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டன.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# குடியிருப்பு - தொழில்வசதிகளை வழங்கும் ...

அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய தமிழ் மக்களே! இந்த ஆழிப்பேரலை அனர்த்தம் உலகத் தமிழ் மக்களையும் பெரிய அதிர்ச்சிக்கும், ஆழ்ந்த கவலைக்கும் ஆழாக்கிய மாபெரும் துயரச் சம்பவம். இப்படியான கோர நிகழ்வுகள் ஐயாயிரம், பத்தாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு தடவை நிகழ்ந்துள்ளதாக வரலாறுகள் கூறுகின்றன.

ஆனால், சமீப காலத்தில் இப்படியான பெரியதொரு அனர்த்தம் அதுவும், தமிழீழ மண்ணில் நிகழ்ந்தது தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி உலகத்தமிழ் இனத்திற்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

இதனால் ஏற்பட்ட உயிர் அழிவுகள், உங்களை தனிப்பட்ட ரீதியாகவும், குடும்ப ரீதியாகவும் ஏற்பட்ட துன்பங்கள், வேதனைகள் நீண்ட ஆழமான பரிமாணங்கள் எல்லாம் நாங்கள் அறிவோம். அதையிட்டு அதனுடைய தாற்பரியத்தை வார்த்தைகளால் கூறமுடியாது. ஆறுதல் கூட சொல்ல முடியாத அளவிற்கு உங்களது இந்தத்துயர் உங்களை உறுத்தும் என்பதை நான் நன்கு அறிவேன்.

உலகத்தமிழ் மக்களிடையே எமது இயக்கம் பரப்புரைகளைச் செய்து உதவிகளைப் பெற்று தமிழீழத்துக்கு இந்த மனிதாபிமான நிவாரண உதவிகளைச் செய்கின்றோம் என்பதை எடுத்துச் சொல்லவும், தமிழீழத் தேசியத் தலைவரின் அழைப்பின் பேரில் வந்து இலங்கை அரசாங்கம் எந்தளவிற்கு தமிழ் மக்களுக்கு உதவி புரிவதில் எவ்வாறான தடைகளையும், பிரச்சினைகளையும் விதித்து வருகின்றது என்பதனையும் அறிந்துசெல்லவும், இங்கு வந்து நோர்வே அரசில் இருந்து மிக முக்கியமான பிரதிநிதிகள் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்தபோது நானும்கூட இருந்து அவர்களுக்கு எமது மக்களுடைய பிரச்சினையை எடுத்து விளக்கி உலக நாடுகளின் உதவிகள் அவசர தேவை என்பதையும் அவர்களுக்கு எடுத்து விளக்கியுள்ளோம். தலைவரின் பிரதிநிதியாகத் தான் நான் இங்கு வந்துள்ளேன்.

தலைவருடன் பேசும்போது அவருடைய ஆழமான உணர்வலைகளை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. இதில் இராணுவ அரசியல் நடவடிக்கைகளையும் ஒத்திவைத்துவிட்டு முதன்மையாக இந்த ஆழிப்பேரலையால் மக்களுக்கு ஏற்பட்ட அனர்த்தங்களில் இருந்து அந்த மக்களுக்கு உடனடி புனர்வாழ்வு அளிப்பதற்காகவே எமது விடுதலை இயக்கத்தின் சகல கட்டமைப்புகளையும் பணியில் இறக்கியுள்ளார் என்பது உங்கள் எல்லோருக்குமே தெரியும்.

இந்த ஆழிப்பேரலை தாக்கிய போது உடனடியாக உங்களைக் காப்பாற்றவும், உங்களுக்கு அவசர உதவிகளைச் செய்யவும் எமது படையணிகள், எமது அமைப்புக்கள், கடற்புலிகள் மற்றும் அரசியற் பிரிவு உட்பட அனைத்துப் பிரிவுகளையும் உங்களது உதவிகளுக்காக அனுப்பி எமது விடுதலை இயக்கமே உங்களுக்கு பேருதவி செய்து வருகின்றது என்பதனை நான் உங்களுக்குச் சொல்லவேண்டிய தேவையில்லை.

ஆனால், இதைவிட சர்வதேச மட்டத்திலும், இலங்கை அரசுடனும் பேச்சுக்களை நடத்தி உலகத் தலைவர்களை அழைத்து அவர்களுடன் கலந்துரையாடி உங்கள் வாழ்வை வளம்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க முழு முயற்சிகளை எடுக்கின்ற தகவலைச் சொல்வதற்காகவே நான் இங்கு வந்துள்ளேன். எங்களுக்குத் தெரியும் இந்த நலன்புரி நிலையங்கள், பாடசாலைகளில் எப்படியாக உங்களுடைய வாழ்க்கை அமையப்போகின்றது என்பதை நாங்கள் அனுமதிக்கப்போவதில்லை.

விரைபுடன் உங்களை ஒரு வீடமைப்புத் திட்டத்தில் மாற்றி மீண்டும் உங்களுடைய வாழ்வை உங்களுடைய காணிகளில் உங்களைக் குடியமர்த்தி மீண்டும் உங்களுக்கு தொழில் வாய்ப்பை உருவாக்கித் தந்து ஒரு பெரிய புனர்நிர்மாணத் திட்டத்தில் எமது இயக்கம் முழுமையாக முழுமூச்சுடன் பணியாற்றி வருகின்றதென தெளிவாக சொல்லத்தான் நான் இங்கு வந்துள்ளேன்.

கொழும்பு அரசுடன் நாங்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தி அதாவது உங்களுக்கு தெரியும் வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்கள் ஏராளமான உதவிகளை நிதியுதவியுடன் மற்றும் நிவாரணப் பொருட்களையும் அனுப்பிக்கொண்டே இருக்கின்றனர். அந்த பொருட்கள் இங்குவந்து எமது இயக்கத்தின் உப அமைப்பான ரி.ஆர்.ஓ. போன்ற அமைப்புக்கள் அவற்றை உரிய முறையில் விநியோகித்துக் கொண்டிருக்கின்றன.

இப்பொழுது அவசரகால உணவு, உடை, மருந்து போன்ற அவசர உதவிகள் உங்களுக்குக் கிடைத்து வருகின்றது. ஆனால் இது ஆரம்ப கால உதவிகள். இதனைக்கொண்டு வாழ்க்கையை நடத்தமுடியாது என்பது தெரியும்.

ஆனால் வீடுகளை அமைத்து பெருமளவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருளுதவிகளை வாங்கித்தந்து, நிதியுதவிகளைப் பெற்றுத்தந்து வீடமைப்பைத் துரிதப்படுத்தி உங்களை இந்த அகதி முகாம்களில் இருந்து உங்களை உங்களது சொந்த மண்ணிற்கும், சொந்த இடத்திற்கும் அனுப்புகின்ற திட்டத்தில் நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

உலக நாடுகள் பெருமளவு உதவிகளைச் செய்துகொள்ள வாக்களித்துள்ளன. ஆனால் இந்த உதவிகள் இலங்கை அரசாங்கத்தினூடாகத்தான் வரவேண்டியுள்ளது. அரசு என்ற ரீதியில் அவர்களிடம் கையளிக்கும். ஆனால், நாங்கள் என்ன சொல்கின்றோம் என்றால் இந்தப் பெரும் நிதியை எடுத்து எமது மக்களுக்கு சரிசமமாக பங்கிடுமோ என்பதில் எமக்கு சந்தேகம்.

சிங்கள அரசு இந்த சுனாமியினால் தனது அரசியல் தேவைக்காகப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவேண்டிய நிதியுதவியை வேறு வழிகளில் தமது அரசைப் பலப்படுத்தவும், இராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்தவும், தமது அரசியல் அதிகாரத்தை நிலைப்படுத்தவும் பயன்படுத்தலாம் என்ற நோக்கில் உள்ளது.

இதற்கு நாங்கள் அதற்கு ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளோம். வட-கிழக்கில்தான் பெரிய அழிவு ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே வட-கிழக்குக் கரையோர மக்கள் சமூகம் நீண்டகாலமாக பெரும் இடர்பாடுகள், துன்பங்களை அனுபவித்து வந்த இந்த மக்களுக்கு ஒரு நிரந்தரமான புனர்வாழ்வும், அந்த மக்களுக்கு நிரந்தமானதும், சுபீட்சமானதுமான வாழ்வை அமைத்துக் கொடுக்கவேண்டும்.

போராட்டம் என்ற ரீதியில் அரசியல் உரிமைக்கான போராட்டம் வேறு. இந்த மக்களின் பொருளாதார வாழ்வுக்காக ஒரு போராட்டம் இப்ப நடைபெற்றுக்கொண்டிருக்கு. இதில் நாங்கள் சிறீலங்கா அரசுடன் பேசி சிறீலங்கா அரசிற்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட அந்தப் பெருந்தொகை நிதி உதவியை எமது மக்களுக்கு வந்துசேரும் வழிவகைகளை உருவாக்கும் ஒரு கட்டமைப்பை உருவாக்குவதற்கு பேச்சுக்களை நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

கிளிநொச்சி சமாதான செயலகத்திற்கும், கொழும்பு சமாதான செயலகத்திற்கும் இடையே 'பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை எடுத்து சமத்துவமாய் பகிர்ந்தளிக்கும் இரு பகுதியும் இணக்கப்பாடு கண்டு கட்டமைப்பை உருவாக்குவதற்கான' பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இருந்தாலும் இதிலுள்ள பிரச்சினை, சந்திரிகா அரசாங்கம் இலங்கை அரச நிர்வாகத்தின்கீழ் இந்தக் கட்டமைப்பைக் கொண்டு வந்து, தனது அதிகாரத்தை நிலைநிறுத்த சந்திரிகா அம்மையார் இந்த அனர்த்தமான பேரழிவு சூழ்நிலையிலும் தனது அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள முயற்சிக்கிறார்.

ஆனால், எமது தலைவர் நோர்வே வெளிவிவகார அமைச்சரிடம் சொன்னார், உதவி நிதிகள் எமது அமைப்புக்கூடாக எதுவும் தேவையில்லை. நீங்கள் உங்களது வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மூலமாக எங்கள் மக்களுக்கு பணத்தை நேரடியாகக் கொடுத்து, அந்த வேலைத திட்டங்களைச் செய்து மக்களின் வாழ்வை வளப்படுத்தினால், போதும அந்தக்காசு விடுதலைப் புலிகளிடம் வரவேண்டும் என்று நாம் நிர்ப்பந்திக்கவில்லை.

உலகின் அனுதாபத்தால் வந்த இந்தப் பேருதவி மக்களின் விடிவிற்கும், சுபீட்சத்திற்கும் புனர்வாழ்வுக்குமாகக் கிடைக்கவேண்டும் என்பதுதான் இயக்கத்தின் நிலைப்பாடு. கடலும் கடல்வளமும எமது வாழ்வை மேம்பாடு செய்யும் ஒரு முக்கியமான இயற்கை வளம். இந்த வளத்தை வளப்படுத்தித் தான் நாம் எமது வாழ்வை வளம் படுத்தவேண்டும். ஆகவே நாங்கள் மீண்டும் எமது தொழில் முயற்சியை ஆரம்பிக்கவேண்டும். அதற்கான புறநிலையை இயக்கம் நிச்சயமாக உங்களுக்கு உருவாக்கித் தரும் அதற்காகத்தான் முழுமூச்சாக எமது இயக்கம் இப்போது வேலை செய்துகொண்டிருக்கிறது. உலக நாடு எங்கும் நாம் பிரசாரம் செய்து உங்களுக்கு ஒரு சபீட்சமான வாழ்வை உருவாக்கித்தருவோம் எனத் தெரிவித்தார்.

## 'நிப்பொன்' புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்.மாவட்டத்தில் நிப்பொன் புலமைப்பரிசு பெற்ற மாணவ, மாணவிகளையும் அவர்களின் பெற்றோர், பாதுகாவலர், அதிபர், ஆசிரியர்களையும் நேரடியாகச் சந்தித்து உரையாடி நிப்பொன் கல்வி, கலாசார நிலைய செயற்பாட்டை விரிவுபடுத்துமுகமாகவும் கடந்தகால நடவடிக்கைகளை சரிபார்த்து மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் அன்பளிப்புக்களை நல்குவதற்கும் ஸ்ரீலங்கா நிப்பொன் தலைமைக் காரியாலய அதிகாரிகளும், நிர்வாக உறுப்பினர்களும், உத்தியோகத்தர்களும் ஜப்பானிலிருந்து நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

31.01.2005 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நிப்பொன் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் புலமைப்பரிசில் பெறும் மாணவ, மாணவியர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் தமது கடந்த வருட வகுப்பு அறிக்கை மற்றும் ஏனைய சான்றிதழ்களையும் கொண்டுவருமாறும், மாணவர்களுக்குரிய 2005ஆம் ஆண்டு கல்விப் பரிசுப்பொதிகள், கொடுப்பனவுகள் என்பன வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சுனாமியால் 3600 படகுகள் சேதமடைந்தன

வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தினால் சுமார் 3600 மீன்பிடிப் படகுகள் சேதமடைந்துள்ளதாக வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் சில படகுகள் உடைந்து மீணடும் பயன்படுத்த முடியாதுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

## செயன்முறைப் போட்டியில் முதலிடம் பெற்றார்



இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் நடாத்திய இயற்கைப் பதிவேடு செயல்முறைப் போட்டியில், யாழ்.மாவட்ட நிலையில் யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய மாணவி கு.லக்ஷாயினி முதலிடம் பெற்றார். இவர் தனது பரிசில் மற்றும் கேடயத்தை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் பெற்றுக் கொண்டார்.


## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

பாவனையிலுள்ள CANON 1215 போட்டோ பிரதி இயந்திரம் மற்றும் Super Fax 350 மொடல் றோணியோ இயந்திரமும் விற்பனைக்குண்டு

தொடர்பு:- ஆர்.மருதம், 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம்.
















## Jaffna National College of Education

### GRADUATION CEREMONY - 2004

**Venue :** Jaffna National College of Education Audutorium

**Time :** 28th January 2005 at 3.30 pm

**Awarding of graduation by :**
Dr.Thirunavukarasu Kamalanathan
President, JNCOE.

**Blessing by :**
Mr.K.Bernard M.Ed
President, VNCOE

**Guest of Honour :**
Mr.P.Vigneswaran
Z.D.E, Jaffna

Co-ordinatar
(G.C)

(1045)

## VACANCIES FOR FISHERIES SECTOR

*TRO calls applications for the following vacancies, Applications need to reach the below address on or before 31st of January with curriculum vital. Required qualifications are given below.*

(1) FISHERIES DEVELOPMENT OFFICER (FDO) : 11 places
Diploma in fisheries (one year) or Graduate - Arts, Commerce or Science
Salary: Rs. 8,500 >

(2) PLANNING OFFICER - (fisheries) (FO) : 01 place
B.A., B.Com. Or B.Sc. Salary : Rs. 12,500 >

(3) MARINE ENGINEERS'S ASSISTANT (MEA) : 01 place
B.Sc. Preferably in Eng. Salary : Rs. 25,000

(4) DATA ENTRY OFFICER : 01 place
A/L with Computer B.Sc., B.A., B.Com Computer Science.
Salary: Rs. 10,000

(5) FISHERIES EXTENSION OFFICER (FEO) : 01 place
A/L or Diploma in fisheries.
Salary: Rs. 4,500 - 5,000

*Programme Director, Fisheries and Aquaculture Development, Post Tsunami Rapid Rehabilitation and Development Programme, Tamils Rehabilitation Organization, Kandy Road, Kilinochchi*

(C/3618)

# புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளுக்கும் நிவாரண உதவிகள் வழங்கப்படுமாம்!

## - நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்கு, விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடி - அங்கு உதவிப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் விரும்புகின்றதெனவும், இதனை விடுதலைப் புலிகள் செயற்படுத்த வேண்டும் எனவும் நிதி திட்டமிடல் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் உதவிகளை மேற்கொள்ளும் போதும் அவற்றைக் கணக்காய்வு செய்யும் போதும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் அவசியம் இருக்கவேண்டும் எனத் தெரிவித்திருப்பது தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து அமைச்சர் விளக்கமளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாம் கனவுலகிலிருந்து வாழ்க்கையை நடத்த முடியாது. நாம் மனிதாபிமான அடிப்படையிலேயே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு உதவிகளை வழங்கி வருகின்றோம்.

தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் உதவிகளை வழங்கும் போது - மக்கள் வேலிக்கு அந்தப் பக் கம் உள்ளனரா? இந்தப் பக்கம் உள்ளனரா? என்ற அடிப்படையில் உதவிகளை வழங்கக் கூடாது. வடக்கு - கிழக்குப் பகுதிகளில் படையினர் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு மாத்திரமன்றி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் கூட உதவிகள், நிவாரணங்கள் வழங்கப்படவேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடாகும். விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடி இந்த உதவிகள் வழங்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(தே)

## உதவிகளை கண்காணிக்க அரசாங்கம் குழு நியமனம்

(கொழும்பு)

இலங்கைக்கான அனைத்துவிதமான சர்வதேச உதவிகளையும் கண்காணிப்பதற்காக குழு ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இரண்டு ஹெலிகொப்டர்களின் உதிரிப் பாகங்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இந்தப் புதிய நடைமுறையால், 45 கொள்கலன்களில் வந்து சேர்ந்துள்ள நிவாரணப் பொருட்கள் இதுவரை சோதனையிடப்படாமல் இருப்பதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்தது. (01)


## இந்திய கப்பல் நாடு திரும்பியது

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் கடந்த டிசம்பர் 31 ஆம் திகதி நிவாரணப் பணிகளுக்காக காலி துறைமுகத்துக்கு வருகைதந்த இந்தியாவின் தரங்கி கப்பல் நேற்று முன்தினம் திரும்பியது.. இதில் இந்தியக் கடற்படையினர் மற்றும் நிவாரணப் பணியாளர்கள் என சுமார் 200 பேர் வந்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் இந்தக் கப்பல் இந்தியாவுக்குத் திரும்பிய நிகழ்வில் இந்திய உயர்ஸ்தானிகர் நிருபமா ராவ் மற்றும் தென் மாகாண ஆளுநர் கிங்ஸ்லி டி விக்கிரமட்ண ஆகியோர் பங்கேற்றனர்.

இதேவேளை, இந்திய நிவாரணப் பணியாளர்கள் கிழக்கின் பல பகுதிகளிலும் தொடர்ந்தும் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள விகாரைப் பகுதியில் பௌத்தர்களின் மிதப்பு வழிபாட்டுச் சின்னம் கரையொதுங்கியுள்ளது.

இந்தோனேசியா அல்லது தாய்லாந்து நாட்டிலிருந்து கரையொதுங்கியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் இந்த தேர் வடிவிலான கூடாரத்தில் புத்தர்சிலை மற்றும் ஆபரணங்கள் இருந்ததாகவும், அவற்றை இனந்தெரியாத குழுவினர் எடுத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

# கூட்டுறவுக் கடைகளூடாக நிவாரணப் பொருட்கள்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள், நிவாரண அட்டைகளைப் பயன்படுத்தி கூட்டுறவுச் சங்கங்களூடாக உணவுப் பொருட்களையும், நிவாரணப் பணத்தையும் பெற முடியுமென சமுர்த்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு கூட்டுறவு அமைப்பிலும் சமுர்த்தி அதிகாரியொருவர் சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவார். இவர் நிவாரணப் பணத்தைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவார்.

இதேவேளை, ஓய்வூதியம் பெறுபவர்கள் சுனாமி அனர்த்தத்தின் போது தமது ஆவணங்களைத் தொலைத்திருந்தால், மாவட்ட செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும், அவற்றின் பிரதிகளை வழங்க செயலகங்கள் நடவடிக்கை எடுக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இங்கிருக்கும் வெளிநாட்டு படைகளால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

## - ஹெல உறுமய எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டுப் படைகளின் நடவடிக்கைகள் குறித்து தேசிய பாதுகாப்பு அமைச்சர் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும் என, ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான், பங்களாதேஷ், அவுஸ்ரேலியா, கனடா ஆகிய நாடுகளின் இராணுவத்தினர் இலங்கையில் மீட்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். இவர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபடுவது குறித்து ஆட்சேபனை எதுவும் இல்லை. இந்தப் படைகளின் ஏனைய செயற்பாடுகள் குறித்து அரசாங்கம் விழிப்புடன் இருக்கவேண்டும்.

வெளிநாட்டுப் படைகள் கொண்டுவந்துள்ள இராணுவ உபகரணங்கள் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் குறித்து உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. இதனால், நாட்டின் பாதுகாப்புக்கு பாதகம் ஏற்படலாம் என்று அந்தக் கட்சி மேலும் தெரிவித்துள்ளது. (01)

## சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின்

# வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவழிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்!

## ஐ.தே.க. கோரிக்கை

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டுமென ஐ.தே.கட்சி கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஐ.தே.கட்சி குறைபாடுகளைத் தெரிவித்து அரசாங்கம் அமுல்படுத்தும் திட்டங்களுக்கு ஆதரவு வழங்கும், தற்போதைய நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதற்கு அனைவரும் ஐக்கியத்துடன் செயற்படவேண்டும்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் 25 000 ரூபாவை மாதாந்தம் வழங்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# புலிகள் - பொலிஸார் முறுகல் அம்பாறையில் சுமுகமாக தீர்ப்பு!

அம்பாறை அக்கரைப்பற்றில் கடந்த செவ்வாயன்று விசேட அதிரடிப் படையினருக்கும் பொலிஸாருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை கண்காணிப்புக் குழுவின் தலையீட்டையடுத்து சுமுகமாக்கப்பட்டது.

அக்கரைப்பற்று நலன்புரி முகாமில் இருந்த 21 சிறுவர்களை, அவர்களின் பெற்றோர் சம்மதம் இன்றி விடுதலைப் புலிகள் அழைத்துச் சென்றதாக, அதிரடிப்படையினர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். அதனையடுத்து அங்கு சென்ற அக்கரைப்பற்று பொலிஸார் - 21 சிறுவர்களையும் கைது செய்து தடுத்து வைத்ததாகத் தெரிவிக்கப்படுவது ஆட்சேர்ப்பு நடவடிக்கையே எனத் தெரிவித்தனர்.

இது குறித்து விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், அதிரடிப்படையினர் தம்மீது களங்கம் ஏற்படுத்த எடுத்த நடவடிக்கை என்வும், இது திட்டமிட்ட சதி எனவும் கண்டித்துள்ளார்.

எப்படி இருப்பினும் கண்காணிப்புக் குழுவின் தலையீட்டையடுத்து பிற்பகல் 12.30 மணியளவில் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட 21 சிறார்களும் மாலை 5.00 மணிக்குப் பின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அக்கரைப்பற்று காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாமின் முன்பாக விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இருவர் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும், கடும் காயத்துக்குள்ளான அவர்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும் விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார். (01)

# சுனாமி அனர்த்த புனரமைப்புத் திட்டங்கள் உரியமுறையில் முன்னெடுக்கப்படுகின்றன!

## - நடவடிக்கைச் செயலகம்

சுனாமி பேரனர்த்தத்தின் பின்னர் புனரமைப்புத் திட்டங்கள் உரிய முறையில் முன்னெடுக்கப் படுவதாகத் தேசிய நடவடிக்கைகளுக்கான செயலகம் தெரிவித்துள்ளது.

இந்தச் செயலகத்தின் பிரதானிகளான தாரா டிமெல் மற்றும் மனோ தித்தவெல ஆகியோர் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

தனியார், அரசாங்கம், பொது அமைப்புக்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் உதவியுடன் தேசிய நடவடிக்கைகளுக்கான செயலகம் தனது பணிகளை முன்னெடுத்துச் செல்கிறது.

நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான செயற்பாட்டுக் குழு விரைவில் அமைக்கப்படவுள்ளது. அதேநேரம் நிரந்தர பொருளாதார வளர்ச்சிக்கும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு முதற்கட்டமாக - தற்போது தற்காலிகமாக வீடுகள் அமைத்துக் கொடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் நிறைவடைய ஏற்கனவே திட்டமிட்டபடி இந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும். சுனாமியால் உயிரிழந்தோரின் தொகையில் முரண்பாடுகள் காணப்பட்டாலும் சுமார் 40 ஆயிரம் பேர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றம் தொடர்பாகப் பல திட்டங்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. கடற்கரையிலிருந்து 100 மீற்றர் தொலைவிற்கு அப்பாலேயே கட்டடங்கள் அமைக்கப்படவேண்டுமென்ற திட்டம் மீள்பரிசீலனை செய்யப்படவுள்ளது. மீனவ மற்றும் சுற்றுலாத்துறைகளைக் கருத்திற்கொண்டே இந்தத் திட்டம் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படவுள்ளது. இதற்கான ஆலோசனை அமைச்சரவைக் கூட்டத்திலும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

எம்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவையெனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# இலங்கையை பூகம்பம் தாக்கும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கை!

(கொழும்பு)

எதிர்காலத்தில் இலங்கையை பூகம்ப பேரழிவுகள் தாக்கக்கூடிய சாத்தியங்கள் உள்ளதாக ஜப்பான் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

அண்மையில் ஜப்பானின் ஹோபே நகரில் இடம்பெற்ற சர்வதேச அனர்த்த முகாமைத்துவ கருத்தரங்கிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது -

அடுத்த 10 தொடக்கம் 20 வருட காலத்துக்குள் பாரிய சுனாமி அனர்த்தம் ஏற்படச் சாத்தியமுள்ளது எனர் தெரிவித்தனர்.

இதேவேளை சுனாமி குறித்து முன்னரேயே எச்சரிக்கை செய்யக்கூடிய அவதானிப்பு நிலையங்களை ஐ.நா.சபை விஸ்தரிக்குமென அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

பசுபிக் சமுத்திர கண்காணிப்பு நிலைய பணிகள் முழுமையாக விஸ்தரிக்க 18 மாதங்களாவது செல்லும். அதுவரை புதிதாக ஏற்கப்படக்கூடிய சுனாமி தொடர்பான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரிட்டிஷ் கப்பலில் அன்புமாறன்; நாட்டின் இறைமையை பாதிக்குமாம்!

## - தேசப்பற்று இயக்கம்

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு நகர, அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் அன்புமாறனை பிரிட்டிஷ் படையினர் தமது கப்பலுக்கு அழைத்துச் சென்றமை, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயம் எனத் தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பின் தலைவர் வண. எல்லே குணவன்ச தேரர் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் தொடர்பாக மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை வந்துள்ள வெளிநாட்டுப் படைகள் இங்கு அரசியல் செய்வதை நிறுத்த வேண்டும்.

கடந்த சில நாட்களுக்கு முன் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு நகர அரசியல் பொறுப்பாளர் அன்புமாறனை பிரிட்டிஷ் படைகள் - எச்.எம்.எஸ். சதம் என்ற தமது கப்பலுக்கு அழைத்துச் சென்று காண்பித்துள்ளமை தொடர்பாக கடும் விசனத்தை தெரிவிப்பதாகவும் எல்லே குணவன்ச தேரர் தெரிவித்தார்.

### சிம்பாப்வே அணியுடனான

# மூன்றாவது ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணிக்கு வெற்றி!

சிட்டகொங் மைதானத்தில் சிம்பாப்வே அணிக்கு எதிராக நடந்த மூன்றாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி 40 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

ராஜின் சாலே - நபீஸ் இக்பால் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கி அபாரமாக ஆடியது. அணியின் ஸ்கோர் 58 ஆக அதிகரித்த போது நபீஸ் இக்பால் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து அப்ரப் அகமட்டும் களமிறங்கி நிதானமாக ஆடினார். இதனால் ஸ்கோர் விரை



வாகவே உயர்ந்தது.

147 ஓட்டங்களை அணி பெற்றிருந்தபோது அடுத்தடுத்து இரு விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டன. ராஜின் சாலே 93 பந்துகளில் 1 சிக்ஸர், 6 பவுண்டரிகளுடன் 77 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலும் அப்ரப் அகமட் 38 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து ஹபிபுல் பஷார் - அஸ்ரபுல் ஜோடியால் நீண்டநேரம் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அஸ்ரபுல் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இஸ்லாம் ராணா களமிறங்கினார்.

ஆனால் அவரும் 6 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்ப மொர்ராஸா களமிறங்கி பந்துகளை வீணாக்காமல் ஆடினார். 1 சிக்ஸர், 1 பவுண்டரியுடன் 21 ஓட்டங்களை எடுத்த இவர் ஆட்டமிழந்த பின்னர் மஹ்மூத் 9 ஓட்டங்களுடனும் ஹுசெய்ன் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 244 ஓட்டங்களை பங்களாதேஷ் அணி பெற்றது. காலித் மசூட் 9 ஓட்டங்களுடனும், இனாமுல்



ஹக் 4 ஓட்டங்களுடனும், ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பன்யன்கார, உற்செயா, ரெய்லர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், மொபோபு, றோஜர், சிகும்புரா ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆட்டத்தை ஆரம்பித்த சிம்பாப்வே அணியின் முதல் விக்கெட்டை வீழ்த்த பங்களாதேஷ் அணி சிரமப்பட்டாலும் பின்னர் சுதாகரித்துக்கொண்டது.

மற்சிகென்யேரி 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த பின்னர் இப்ராஹிம் ஜோடி ஆடியது. இப்ராஹிம் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழக்க மசகட்சா ஆடுகளம் வந்தார்.

ஆனால் 9 ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழந்து போக அவருக்குப் பதிலாக ரெய்லர் களமிறங்கினார். ஆனால் இதற்கிடையில் நிதானமாக நின்றுபிடித்து ஆடிக்கொண்டிருந்த றோஜர் 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ரெய்லர் - தைபு ஜோடி அடுத்ததாக இணைந்துகொண்டது. ஆனால் ஸ்கோர் 133 ஆக உயர ரெய்லர் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் தைபுவுடன், சிகும்புரா இணைந்து அணியை மீட்க முற்பட்டாலும் தைபு 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததால் சிம்பாப்வே அணி தள்ளாடியது.

சிகும்புரா 18 பந்துகளில் 2 பவுண்டரி ஒரு சிக்ஸருடன் 27 ஓட்டங்களையும், பன்யன்கார 8 ஓட்டங்களுடனும், உற்செயா 1 ஒரு ஓட்டத்துடனும், ஹொண்டோ 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இதனால் 47.5 ஓவர்களிலேயே சிம்பாப்வே அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால் 40 ஓட்டங்களால் அவ்வணி தோல்வி கண்டது.

பந்துவீச்சில் இஸ்லாம் ராணா 4 விக்கெட்டுக்களையும், மொர்ராஸா, ஹுசெய்ன், மசூத் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

### பாடசாலை மட்ட கிரிக்கெட்

# 19 வயதுப் பிரிவில் சென்.ஜோன்ஸ் வெற்றி

யாழ். மாவட்ட பாடசாலை கிரிக்கெட் போட்டிகளில் இவ்வருட 19 வயதுப் பிரிவுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்தத் தொடரின் முதலாவது போட்டியில் - கடந்த திங்கட்கிழமை யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் மோதியது. இதில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 9 விக்கெட்டுக்களால் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியை வெற்றி கொண்டது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி, முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 69 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வீரர் சுதர்சன் 28 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் சார்பில் அன்புஜன் 6 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், சஞ்சீவன் 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நவஜீதன் ஆட்டம் இழக்காமல் 34 ஓட்டங்களையும், மயூரதன் 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வீரர் சாம்சன் 29 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந்தார்.

தொடர்ந்து தன்னுடைய இரண்டாவது இனிங்ஸை ஆடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி 53 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் கஜதீபன் 14 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். சென்.ஜோன்ஸ் வீரர்கள் நவஜீதன் 11 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும், மயூரதன் 4 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸில் 4 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி பெறலாம் என தொடர்ந்து ஆடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 1 விக்கொட்டை மட்டும் இழந்து 4 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. (58)

## விளையாட்டு

# கிரிக்கெட் போட்டிகள்

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளிடையே நடைபெற்று வரும் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்றும் நாளையும் நான்கு போட்டிகள் நடைபெறவுள்ளன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதும் போட்டியும்,

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் - யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதும் போட்டியும்,

தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி மைதானத்தில் - யாழ்.மத்திய கல்லூரியை எதிர்த்து மகாஜனா கல்லூரி அணி மோதும் போட்டியும்,

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் - சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதும் போட்டியும் நடைபெறவுள்ளது. (58)

## கும்ளேக்கு பத்மஸ்ரீ விருது

(புதுடெல்கி)

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற துப்பாக்கி சுடும் வீரர் ராஜ்யவர்தன்சிங் ரதோர் உட்பட 5 விளையாட்டு வீரர்கள் இந்திய மத்திய அரசின் பத்மஸ்ரீ விருதுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ள அனில் கும்ளே, முன்னாள் தடகள வீரர் குர்பச்சன் சிங் ரந்தாவா, முன்னாள் இங்கிலாந்து பட்மின்டன் சம்பியன் புல்லேல கோபிசந்த், ஸ்கைடைவிங் வீரர் ராச்செல் தொமஸ் ஆகியோரே இந்த விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## முதலிடத்தில் ஜக் கலிஸ்!

(லண்டன்)

இங்கிலாந்துக்கு எதிரான 5 ஆவது டெஸ்டில் சதம் அடித்ததன் மூலம் எல்.ஜி - ஐ.சி.சி டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளார் தென்னாபிரிக்காவின் ஜக் கலிஸ். அவர் 893 புள்ளிகளைச் சேர்த்துள்ளார்.

இதையடுத்து 882 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருந்த இந்தியாவின் ராகுல் ராவிட் 2 ஆம் இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

# அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ்; ஷரபோவா தோல்வி கண்டார்



அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் போட்டியில் அரையிறுதி ஆட்டத்தில் செரினா வில்லியம்ஸிடம் ரஷ்யாவின் மரியா ஷரபோவா தோல்வியடைந்தார்.

நேற்றுக் காலை நடந்த பெண்கள் ஒற்றையர் அரையிறுதி ஆட்டத்தில் 17 வயதான ஷரபோவா முதல் செட்டை 6-2 என்ற கணக்கில் வென்றார். 2 ஆவது செட்டில் செரீனா ஈடுகொடுத்து ஆடினார். இருவரும் மாறிமாறி புள்ளிகள் எடுத்தனர். அந்த செட்டை செரீனா 7-5 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

இருவரும் தலா ஒரு செட் கைப்பற்றியதால் ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது. வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் 3 ஆவது செட்டில் இருவரும் மாறி மாறி புள்ளிகளை எடுத்ததால் ஆட்டம் பரபரப்பானது.

கடைசி செட்டை முன்னாள் முதல்நிலை வீராங்கனையான செரீனா 8-6 என்ற கணக்கில் வென்று இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றார். ஸ்கோர் 2-6, 7-5, 8-6.

ஷரபோவா நேற்றைய ஆட்டத்தில் வெற்றிபெற நல்ல வாய்ப்பு இருந்தது. 2 ஆவது செட்டிலும், கடைசி செட்டிலும் அவருக்கு புள்ளிகள் பல கிடைத்தன. பதற்றத்தால் தவறவிட்டு வெற்றியை இழந்தார்.

மற்றொரு அரையிறுதியில் டேவன்போர்ட் (அமெரிக்கா) 2-6, 7-6 (7-5), 6-4 என்ற செட் கணக்கில் நதாலியை (பிரான்ஸ்) வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் காலிறுதியில் ஹெவிட் - டேவிற் நள்பாந்தியனை எதிர்த்து களமிறங்கினார். முதல் இரண்டு செட்களில் ஹெவிட் வெற்றி பெற்றார். இரு வீரர்களும் மாறி மாறி கேம்களைக் கைப்பற்றினர். 8-8 என்ற சமநிலையில் இருந்தபோது நள்பாந்தியனின் சேவிசை பிரேக் செய்த ஹெவிட் 8-10 என்ற கணக்கில் வென்றார். இறுதியில் ஹெவிட் 6-3, 6-2, 1-6, 3-6, 10-8 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றார்.

இன்று நடக்கும் அரையிறுதியில் ஹெவிட் அமெரிக்காவின் அன்டி ரொடிக்கைச் சந்திக்கிறார். முன்னதாக நடந்த மற்றொரு காலிறுதியில் ரொடிக் ரஷ்யாவின் நிகோலே டேவிடென்கோவைச் சந்தித்தார். மூன்றாவது செட்டின் பாதியில் மூச்சுத் திணறல் காரணமாக நிகோலே வெளியேறுவதாக அறிவித்தார். இதையடுத்து ரொடிக் 6-3, 7-5, 4-1 என்ற செட்களில் வென்றார்.

பெண்கள் ஒற்றையர் காலிறுதியில் டேவன்போர்ட், அலிசியா மோலிக்கைச் சந்தித்தார். முதல் செட்டை மோலிக் 4-6 என்ற கணக்கில் இழந்தார். பின்னர் மோலிக் இரண்டாவது செட்டை 6-4 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

மூன்றாவது செட்டில் கடும் போட்டி காணப்பட்டது. 7-7 என்ற நிலையில் இருந்தபோது மோலிக்கின் சேவிசை பிரேக் செய்த டேவன்போர்ட் 6-4, 4-6, 9-7 என்ற செட் கணக்கில் வெற்றி



பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் பிரான்சின் நதாலி டெகி, சுவிற்சர்லாந்தின் பேட்டி சிண்டரை 5-7, 6-1, 7-5 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

# கடற்புலிகளின் வளர்ச்சியில் தான் புலிகளின் பலம் தங்கியுள்ளது!

## கடற்புலிகளின் துணைத் தளபதி செழியன் தெரிவிப்பு

கடற்புலிகளின் பெரும்பான்மையான போராளிகளை வளர்ப்பது கரையோர மக்களே. எனவே, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினால்தான் எமது போராட்டத்தையும் வலுப்படுத்த முடியும் என அண்மையில் தும்பளையில் மீன்பிடிப்படகுகள் திருத்தும் நிலையத்தை திறந்துவைத்துப் பேசிய கடற்புலிகளின் துணைத்தளபதி செழியன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் -

எமது போராட்டத்தைக் கட்டியெழுப்புவதில் கரையோர மக்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். யுத்த காலத்தில் எமது கடற்புலிகள் போர் புரிந்து, விழுப்புண் அடைந்து திரும்புகையில் - அவர்களையும், அவர்களின் படகுகளையும் பாதுகாப்பாக கரை சேர்ப்பது கடற்கரையோர மக்களே.

இன்று இந்த மக்கள் எல்லாவற்றையும் இழந்து ஏதிலிகளாக இருக்கின்றனர். ஆயினும், எமது போராட்டத்தை வலுப்படுத்திய மக்களின் வாழ்வாதாரத்தை சுனாமி அனர்த்த நிவாரண உதவிகள் மூலமே கட்டியெழுப்பமுடியும்.

கடற்புலிகளின் வளர்ச்சியிலேயே விடுதலைப் புலிகளின் பலம் தங்கியுள்ளது. அதனால்தான் கடற்புலிகளின் வளர்ச்சிக்காக அந்த மக்கள் பாடுபட்டு உழைக்கின்றனர்.

அவர்களின் சுயவாழ்வை மேம்படுத்தினால் மட்டுமே, எமது போராட்டம் வளர்ச்சியடையும். அதன்மூலமாகத்தான் எமது இலக்கை நோக்கி வேகமாக நகரமுடியும்.

இந்தத் திறப்புவிழாவில், நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன், கஜேந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தத் திருத்தும் நிலையம் - வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சங்க சமாசத்தால், நோர்வே - சீநோர் நிறுவன அனுசரணையுடன் திறந்து வைக்கப்பட்டது. (14)

### தோமஸ் அடிகளாரின் 41 ஆவது சிரார்த்ததினம்



தோலகட்டி ஆசிரமத்தின் நிறுவுனர் வண. தோமஸ் அடிகளாரின் 41 ஆவது சிரார்த்ததின நிகழ்வு இன்று காலை 6.30 மணிக்கு யாழ். கோவில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆசிரமத்தில் நடைபெறும்.

யாழ். குருமுதல்வர் ஜே.நீக்கிலஸ் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, அவரது கல்லறைத் தோட்டம் ஆசீர்வதிக்கப்படும்.

## சித்த ஆயுர்வேத வைத்திய நிலையம் கொய்யாத்தோட்டத்தில் திறப்பு

பாஷையூர் -கொய்யாத்தோட்டத்தில் அமைக்கப்பட்ட யாழ். மாநகரசபையின் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை - மகப்பேற்று மருத்துவ நிலையம் இன்று காலை 10.30 மணிக்கு மாநகர ஆணையாளர் கலாநிதி குணராஜாவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

மாநகரசபைக்குச் சொந்தமான இந்த இடத்தில், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதியிலேயே இந்த வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ளது.

புதிதாகத் திறக்கப்படவுள்ள இந்த வைத்தியசாலையில், யாழ். பல்கலைக்கழகத்தில் சித்த ஆயுர்வேதத் துறையில் கல்விகற்று வெளியேறியவர்களே கடமையாற்றவுள்ளனர்.

இதேபோன்ற வைத்தியசாலையொன்று கடந்த வாரம் கொழும்புத்துறையிலும் திறந்து வைக்கப்பட்டதாக கூறிய மாநகர ஆணையாளர் -

இவ்வாறான சித்த ஆயுர்வேத வைத்திய நிலையங்கள் கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டு வருவதால், கிராம மக்கள் வைத்திய சேவையை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

### சேதமடைந்த ஆலயங்களின் விபரங்களை அனுப்ப கோரிக்கை

சுனாமி கடற்கொந்தளிப்பால் சேதமடைந்த இந்து ஆலயங்களும், அவற்றின் உடமைகளும் மீண்டும் திருத்தம் செய்யப்படவுள்ளன.

இதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சேதமடைந்த இந்து ஆலயங்களதும், பூஜை உபகரணங்களதும் விபரங்களைத் திரட்டி வருகிறது.

சேதமடைந்த ஆலய நிர்வாகத்தினர் உடனடியாக தமது பிரிவு கிராம அலுவலர் ஊடாக, யாழ்ப்பாணம் இந்து கலாசார அலுவல்கள் பிரிவுக்கு சேத விபரங்களை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (101)

### நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் தேனீர்ச்சாலை

நெடுந்தீவுப் பிரதேச பொலிஸ் நிலையத்தில் பொதுவான தேனீர்ச்சாலையொன்று கடந்த வாரம் திறக்கப்பட்டது.

பொலிஸ் நிலைய நுழைவாயில் அருகிலும், தபால் நிலைய வளாகத்திலும், பிரதான வீதிக்கு அண்மையிலுமாக இந்தத் தேனீர்ச்சாலை திறக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுப் பிரதேசத்திலுள்ள தேனீர்ச்சாலைகளில் - தேனீர், சிற்றுண்டி என்பவற்றின் விலைகளைவிட, இங்கே குறைவான விலையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரியவருகிறது. (113)

### மீளக் குடியேறியோருக்கு கொடுப்பனவு

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு, கற்கோவளம் ஜே/406 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அண்மையில் 25 ஆயிரம் ரூபாவுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

இந்தப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்டு, தற்போது மீளக்குடியமர்ந்த சுமார் 201 குடும்பங்களுக்கு வீட்டுப் பாவனைப் பொருட்கள் வழங்குவதற்காகவே இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

### நடைபாதைக் கடைகள் பெப்ரவரி முதல் முற்றவெளியில்

யாழ். முற்றவெளியில் நடைபாதை வியாபார கடைகள் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளதாக, யாழ். மாநகரசபை ஆணையாளர் க.குணராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதியில் இரு பக்கங்களிலும் அமைந்துள்ள நடைபாதை வியாபார நிலையங்களால் போக்குவரத்து நெருக்கடியை மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இதனால் இந்த வியாபார நிலையங்களை அப்புறப்படுத்தி, முற்றவெளிப் பகுதியில் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முனீஸ்வரன் வீதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்துக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத் தலைவர் வ.கந்தசாமி சைவபரிபாலன சபையுடன் இணைந்து ஐம்பது வருடங்களுக்கு மேலாக சைவப் பணிகளையும், சைவசமய பரீட்சைகளையும் மிகத் திறமையாக மேற்கொண்டு வருவதைக் கௌரவிக்கும் முகமாக, எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் நாவலர் ஆசிரம மண்டபத்தில் பாராட்டு விழா நடாத்த சைவபரிபாலனசபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (111)

### ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெற்று வரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் - இன்று மாலை 6.30 மணிக்கு 'சைவக் கிரியைகள்' எனும் தலைப்பில் ப.சிவயோக நாத தேசிகர் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

# கொழும்பு நகர லயன்ஸ் கழகம் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளது

கொழும்பு நகர லயன்ஸ் கழக குழுவொன்று -அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணப் பகுதிக்கான உதவிப்பணி விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி கொழும்பிலிருந்து வரவுள்ள இந்தக் குழுவில் - லயன்ஸ் கழக அங்கத்தவர்களான கொழும்பு நகர வர்த்தகர்கள் பலர் பங்குபற்றவுள்ளனர்.

வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள பொது அமைப்புக்களை இந்தக் குழுவினர் சந்திக்கவுள்ளதுடன், அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் வழங்கவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அளவெட்டி மகாஜன சபை சனசமூக நிலையத்தினருக்கு உதவிகளை வழங்கவுள்ள லயன்ஸ் கழகத்தினர் - அவர்களால் முன்னெடுக்கப்படவுள்ள புதிய செயற்திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடவுள்ளனர்.

கொழும்பு நகர லயன்ஸ் கழகத்தினர் இந்த விஜயத்தின்போது, யாழ். மாவட்ட லயன்ஸ் கழகங்களுடனான சந்திப்புக்கள், விருந்துபசாரங்கள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

மூன்று நாள் குடாநாட்டில் தங்கி நிற்கவுள்ள இந்தக் குழுவினர் - பல புதிய செயற்திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (94)

# நெடுந்தீவில் கடற்படையினரின் காவலரண்கள் புனரமைப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் - கடந்த சில நாட்களாக காவலரண்களைப் புனரமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நெடுந்தீவுப் பொலிஸ் நிலைய வளாகம் மற்றும் தபாலக வளாகத்தில் நிலைகொண்டிருக்கும் கடற்படையினரே இந்த அரண் அமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, நெடுந்தீவுப் பிரதேசத்தில் மணல் அகழ்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள வடக்கு கரையோர மணற் கடற்கரையிலிருந்து மணல் ஏற்றப்பட்டே இந்த அரண்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே சுனாமி கடற் கொந்தளிப்பு காரணமாக, கரையோரப் பகுதிகள் ஆபத்தான நிலையில் உள்ள வேளையில், கடற்கரையில் மேலும் மணல் அகழ்வு மேற்கொண்டுள்ளமையையிட்டு, அந்தப் பகுதி மக்கள் பெரும் விசனம் தெரிவித்துள்ளனர். (113)

# கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களை பதியக் கோரிக்கை

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கு-கிழக்கு கால்நடை வளர்ப்போரின் இழப்புக்களை ஈடுசெய்யும் முகமாக, பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்போரின் பட்டியல் திரட்டப்பட்டு, அந்த இழப்பீட்டுத் தொகையை அரசிடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கையை பருத்தித்துறை கால்நடை வைத்திய நிலையம் மேற்கொண்டு வருகிறது.

இழப்புக்களை ஈடுசெய்வதற்காக - வடமராட்சி வடக்கில் 6.6 மில்லியன் ரூபாவும், வடமராட்சி கிழக்கில் 6.55 மில்லியன் ரூபாவும் தேவையாகவுள்ளது.

மேலும் தற்போது ஏற்பட்ட சுனாமி கடற்கொந்தளிப்பால் கடற்தொழிலாளர்கள் கடலுக்குச்செல்ல அச்சப்பட்டு, கடற்தொழிலைக் கைவிட்டு கால்நடை வளர்ப்பிலோ அல்லது பகுதி நேரமாகவோ கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருக்கும் வடமராட்சி வடக்கு - கிழக்கு மக்களுக்கு, புனர்வாழ்வு திட்டத்தின்மூலம் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

கால்நடைகளை வளர்க்க விரும்புவோர் தமது விபரப் பட்டியலைப் பருத்தித்துறைக் கால்நடை வைத்தியசாலையில் சமர்ப்பிக்குமாறு, பருத்தித்துறை கால்நடை வைத்தியர் சி.வசீகரன் கோரியுள்ளார். (12)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை மூன்று



பெயர் : சி.அபிநாத்
முகவரி : கூவில், புலோலி.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


# தெல்லிப்பழை வைத்தியசாலையில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒருமாதமாக இரத்த அழுத்தத்துக்குத் தேவையான அல்டோமற், நீரிழிவு நோயாளர்களுக்கு வேண்டிய றஸ்ரினன், டயனிஸ், பீகொம்பிலெக்ஸ், பனடோல் போன்ற அத்தியாவசியமான மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

நீண்டநேரமாக வரிசையில் நின்று மருத்துவரிடம் காட்டியும், மருந்து கிடைக்காததால் நோயாளர்கள் மிகுந்த மனவேதனையுடன் மருத்துவர் எழுதிக் கொடுக்கும் துண்டுடன், தனியார் மருந்துக் கடைகளை நாடவேண்டியுள்ளதென நோயாளர்கள் கவலை தெரிவித்தனர். (111)

### விறகு ஏல விற்பனை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் - பகிரங்க ஏலவிற்பனை நாளை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் ஐம்பது ட்ரக்ரர் லோட் விறகுகளும், நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்ட ஐந்து ஆடுகளும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளதாக பருத்தித்துறை நீதிமன்றப் பதிவாளர் எஸ்.மார்கண்டு தெரிவித்தார். (12)

### சிறுவன் மரணம்

தோட்டக்காணியில் பட்டமேற்றி விளையாடிக்கொண்டிருந்தபோது, கிணற்றினுள் தவறி வீழ்ந்து சிறுவனொருவன் மரணமடைந்த சம்பவமொன்று புத்தூர்ப் பகுதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஜெயசீலன் நிரோஜன் (வயது 10) என்ற சிறுவனே மரணமானவராவார்.

இதேவேளை, அண்மையிலும் இந்தப் பகுதியில் பட்டமேற்றிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன் தவறுதலாக கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்த சம்பவமொன்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (110)

# குருநகர் புதுமைமாதா நவநாள் திருப்பலி

குருநகர் புதுமைமாதா ஆலய நவநாள் திருப்பலி கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தினமும் மாலை 5.15 மணிக்கு செபமாலையைத் தொடர்ந்து பிரசங்கம், ஆராதனைகள், எழுந்தேற்றம் என்பன நிகழும்.

எதிர்வரும் 2 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு நற்கருணை வழிபாடும், மறுநாட் காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

மாலை 5.30 மணிக்கு தேர்ப்பவனி ஆரம்பமாகி, திருச்சொரூப ஆசீர்வாதம் வழங்கலுடன் நவநாள் திருநாட்கள் நிறைவுபெறும். (206)




# அகநிலை மாற்றத்தின் அவசியம்



ஆதிலட்சுமி சிவகுமார்

பெண் – சமூகத்தின் முதுகெலும்பு போன்றவள். இந்தப் பெண்தான் சமூகத்தை நிமிர்ந்து நிற்க வைப்பவள். பெண் என்ற இந்தச் சமூக அங்கம் பலமிழந்து அல்லது சோர்வடைந்து போகின்ற பொழுது, சமூகமும் சோர்வடைந்து அல்லது பலமிழந்து போகின்ற அபாயம் தோன்றிவிடும்.

சமூகத்தில் பெண்கள் பலமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளும் விடயம். பெண்ணின் கல்வி, பொருளாதாரம், அரசியல், சுதந்திரம் என்பவை பெண்ணுக்கு – அவளின் நிமிர்வுக்கு ஆதாரங்களாக அமைகின்றன.

பெண்ணின்பலம் என்பது எது? என் ற கேள்வி எம்முன் எழாமல் இல்லை. அண்மையில் தமிழகத்திலிருந்து வந்த பேராசிரியர் ஒருவர் பெண்களின் பிரச்சினைகள் பற்றி உரையாடினார்.

அப்பொழுது அவர் –

'பலமான பெண்களையும் எளிமையான பெண்களையும் எந்தவிதமான அநீதிகளும் அணுகுவதில்லை. குறிப்பாக சேரிப்புறப் பெண்களும், கரையோரப் பெண்களும் மற்றையவரில் தங்கி வாழ்வதில்லை. இரு பகுதியினரும் தாமே உழைக்கின்றனர். இவர்களை அதிகாரம் செலுத்தமுடியாது. யாராவது அநீதியான முறையில் அதிகாரம் செலுத்த முனைந்தால், சேரிப்பெண் கோடாரியைத் தூக்குவாள். கரையோரப் பெண் அரிவாளைத் தூக்குவாள்...' என்று கூறினார். அவரின் கூற்றுப்படி பொருளாதாரமும், உடல்வலுவும் பெண்ணின் பலமாக முன்வைக்கப்படுகிறது.

பெண்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக இடம்பெற்ற ஒரு கலந்துரையாடலின்போது பேசிய ஒருவர், 'பெண்ணிடம் மிகப் பெரிய பலமிருக்கிறது. அது கண்ணீர். அழுது அழுதே பெண் எதையும் சாதித்துவிடுகிறாள்' எனக் குறிப்பிட்டார்.

பல வேலைத்தளங்களிலே நிர்வாகிகளாக ஆண்கள் இருக்கிறார்கள். இவர்களின் நிர்வாகத்தில் பல பெண்கள் பணியிலிருப்பார்கள். பணி நிமித்தம் சில வேளைகளில் முரண்பாடுகள், பிரச்சினைகள் எழுவது தவிர்க்கமுடியாததாக இருக்கும். இவ்வாறான நேரங்களில் பெண் அழுதுவிடுகிறாள்.

அழுகை என்பது உண்மையில் பெண்ணின் பலவீனம்தான். அழுவதன் மூலம் பெண் தனக்கான நீதியை, நியாயத்தை இழந்துவிடுகின்றாள். இன்னும் சில சந்தர்ப்பங்களில் தனக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிந்தும், பெண் மௌனமாகவே இருந்து விடுகிறாள். அந்த அநீதிக்கெதிராகப் போராடவோ அல்லது நியாயம் பெறவோ தவறிவிடுகிறாள்.

ஏனென்றால் , தன்னை அங்கமாகக் கொண்டிருக்கும் சமூகத்துக்கு அவள் பயப்படுகிறாள். இந்தப் பயம் பலவீனமாக மாறி, அவளின் முன்னேற்றங்களுக்குத் தடையாகிவிடுகிறது.

பெண்ணைப் பழிப்பவர்கள் இன்னமும் சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். பெண் என்பவள் பாலியல் நோக்குக்கு அப்பாற்பட்ட ஒரு மனிதப்பிறவி என்பதை இவர்கள் புரிந்துகொள்வதில்லை. பெண் என்பதற்காகவே பெண் அதிக துயரம் சுமப்பவளாக இருக்கின்றாள்.

பெண்ணைப் புரிந்துகொள்பவர்கள் மிகச்சிலர். அதிலும் அவள் ஒரு மனிதப் பிறவி என்பதைப் புரிந்துகொள்பவர் இன்னும் மிகச்சிலர். இந்தப் புரிந்துணர்வின்மைக்கும் ஒரு காரணம் இருக்கத்தான் செய்கிறது.

சமூகக் கட்டமைப்பு என்பது, பெண்ணை ஒரு மனிதப் பிறவியாக ஏற்றுக்கொள்ளும் நிறைவான மனநிலையில் இல்லை. ஆணையும், பெண்ணையும் இரு துருவங்களாக்கிவிட்டிருக்கிறது.


ஆண் – பலசாலி என்றும், பெண் – பலவீனமானவள் என்றும் அடிப்படைக் கருத்தியலில் முழுமையான மாற்றம் இல்லை. இதனால்தான் பலசாலிகளாகத் திகழும் பெண்களைக்கூட 'ஆணைப் போல' என்கிறது.

பெண்தன் எதிர்காலம்பற்றி அல்லது நிமிர்வுபற்றிச் சிந்திக்க முயல்கையில், அவளைப் பிறழ்வுள்ளவளாகக் காட்டுகிறது சமூகம். கல்வி அடிப்படையில் ஒரு பெண் முன்னேற்றம் கண்டால் – அதைக் 'கடவுளின் கிருபை' என்கிறது.

பொருளாதார ரீதியில் ஒரு பெண் முன் னேற்றம் கண்டால் – 'இது எப்படி நிகழ்கிறது?' என அவளின் ஒழுக் கத்தைச் சந்தேகக்கண்கொண்டு பார்க்கிறது.

(தொடரும்...)

# சந்தோஷத்துக்காக நேரம் ஒதுக்குங்கள்



சந்தோஷத்துக்காக நேரம் ஒதுக்குவதில் முதலில் முறையான ஆரம்பம் பற்றியும், பின்னர் தேவையற்றதை ஒதுக்கவேண்டும் என்பது பற்றியும் பார்த்தோம். இந்த வாரம், பணத்தைச் சேமிப்பதாக நினைத்து நேரத்தை எவ்வாறு வீணடிக்கிறோம் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

எல்லோருக்குமே பணம் அவசியம். பணம் இல்லாமல் எதுவும் செய்யமுடியாது என்பது உண்மையே. ஆனால், எங்களில் பலருக்குப் பணத்தின் மதிப்பை உணர்ந்த அளவுக்கு, நேரத்தின் மதிப்பை உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. சில நேரங்களில் நாங்கள், குறைந்தளவு பணத்தை மிச்சப்படுத்துவதற்காக நிறைய நேரத்தைச் செலவிடுவதற்குத் தயங்குவதில்லை.

உதாரணமாக – எங்களுக்கு ஏதாவதொரு பொருள் வாங்கவேண்டுமென்று வைத்துக்கொள்வோம். நாங்கள் முதலில் ஒரு கடைக்குச் சென்று அந்தப் பொருளுக்குரிய விலையைக் கேட்கின்றோம். பின்னர் அதைக் கொள்வனவு செய்யாமல் இன்னொரு கடைக்குச்சென்று விலையைக் கேட்கின்றோம். சில நேரங்களில் அந்த விலை எமக்கு நியாயமானதாக இருந்தாலும், அந்தப் பொருளின் தரம் பிடிக்கவில்லை என்று இன்னொரு கடைக்குச் . செல்கிறோம்.

இவ்வாறு பல கடைகளுக்கு ஏறி இறங்கி விலை கேட்டு, கடைசியில் மிகக் குறைந்தவிலை வித்தியாசத்துக்காக பல மணி நேரங்களை வீணடித்துவிட்டு வருகின்றோம். இதை நாம் தவிர்க்க வேண்டும்.

சிலபேர் நினைக்கலாம் "எங்களுக்குப் பணம்தான் முக்கியம்" என்று. ஆனால் மிகச்சிறிய ஒரு தொகைப்பணத்துக்காக பல மணித்தியாலங்களைச் செலவழிப்பது புத்திசாலித்தனம் அல்ல என்றே கூறவேண்டும். ஏனெனில் குடும்பத்துக்காகவோ அல்லது தனக்காகவோ நேரத்தைச் செலவழிக்க நினைப்பவர்கள் – அந்த நேரம் கிடைக்காமல் இருக்கும்போது, இவ்வாறு ஒரு சிறிய தொகைப் பணத்துக்காகப் பல மணிநேரங்களை வீணடிப்பதைத் தவிர்ப்பதன்மூலம், சந்தோஷத்துக்காக நேரம் ஒதுக்கிக் கொள்ளமுடியும். ஆனால், தேவையான பணத்தைச் சேமிப்பது முக்கியம். அதை நேரத்தைச் சேமிப்பதற்காக செலவழிக்க முடியாது. எப்போது சேமிக்கவேண்டும். எப்போது செலவழிக்கவேண்டும் என்பதை அவரவரின் குடும்ப சூழ்நிலை, தேவைகள் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு கையாள்வது சிறந்தது.

ஆனால் பணத்தைச் சேமிப்பதாக நினைத்து, நேரத்தை வீணடிக்காமல் இருப்பதற்கான சூழ்நிலைகளை நாம் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

# மனமே! மீண்டெழுவாய்

போர் மற்றும் இயற்கை அனர்த்தம் காரணங்களால் பல்வேறு வகையில் உளநலம் பாதிப்புக்குட்பட்டவர்களின் மனநிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களின் மனதை ஆற்றுப்படுத்தும் முகமான கருத்துக்களை உள்ளடக்கி இந்தக் கட்டுரைத் தொடர் பிரசுரிக்கப்படுகிறது.



உன் மனதுக்குள் இன்பங்கள் ஓடிவரும், துன்பங்களும் ஓடிவரும் இரண்டையும் ஜீரணிக்கும் பக்குவம் உன் மனத்துக்கு உண்டு. ஓடிவரும் இன்பத்தையும், துன்பத்தையும் சமநிலையில் வைத்திருக்கும் பக்குவமும் உன் மனதுக்கு உண்டு.

துன்பம் வரும்போது அழுகிறாய். இன்பம் வரும்போது சிரிக்கிறாய். இன்பத்துக்கும், துன்பத்துக்கும் நகர்வுண்டு. அந்த நகர்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் மனநிம்மதிக்கான தேடல்களைக் கற்றுக்கொள்.

பார்க்கவும், கேட்கவும், அறியவும் உணரவும், சிந்திக்கவும் ஆற்றல் படைத்த அற்புதமான உன் மனதை நீ பேணவேண்டியது உன் கடமை.

நீ ஒரு அற்புதமான பிறவி. உன்னை இயற்கைதான் படைத்தது. நீ உயிர் தாங்கிய உடலோடு பிறந்தாய். உன் தாயும், தந்தையும் உன் பிறப்புக்குரிய கருவியாகினர். அதனால் பாசவலைக்குள் கட்டுண்டு திணறுவதும் உன் மனம்தான்.

நாம் எப்படி வந்தோம். எப்படிப் போவோம் என்பது உனக்கே தெரியாது.

உயிர் உடலுக்குள் இருக்கும்வரை உன் மனம் உறங்குவதில்லை. சிந்தனையும், மொழியாற்றலும் உனக்குள் இருப்பதனால், உன் மனம் வளர்ச்சியடையும்.

அந்த வளர்ச்சியடையும் மனதை நீ பேணிக்காக்கவேண்டியது உனக்கு மட்டும்தான் உரியது. பாதிப்புக்கள், இழப்புக்கள், அச்சங்கள் உன்னைச் சந்திக்கும் அந்த வேளையில் உன் மனதைச் சுற்றி காவல்கார். எவற்றையும் மனதுக்குள் செல்லவிடாதே.

மனமே! உன் மனம் அனிச்சம் பூவின் மென்மையிலும் மென்மையானது.

அதை அச்சமும், பயமும் தாக்கி விட்டால், உடைந்துவிடும். மனம் உடைந்த வாழ்க்கை உன் எதிர்கால உள்ளத்தையும், உடலையும் ஊனத்துக்குள்ளாக்கிவிடும்.

நீ நடைப்பிணமாகி விடுவாய். உனக்கே நீ சுமையாகிவிடுவாய். வாழவும் முடியாமல், மீளவும் முடியாமல் தவிக்கவேண்டிய நிலைக்குள் சிக்கி விடுவாய்.

இந்த நிலை உன் வாழ்க்கைக்கு வேண்டவே வேண்டாம். நரகத்தை நீ வ்ரவழைக்காமல் இருக்க உன் மனதைப் பேணிக்கொள்.

கடலலை தாவி உன்னை நெருங்கி வரும்போதும் பயப்படாமல் தாவி ஓடு.

உறவுகள் தவிக்கும் காட்சிகள் உன் மனதைக் கொல்லும்.

உறவுகளின் பிரிவு உன்னை உலுக்கும்.

அந்த நேரத்தில் உன் மனதைத் திடமாக்கிக்கொள்.

விதைத்தவன் யார்?<br>
வளர்ப்பவன் யார்?<br>
பறிப்பவன் யார்?<br>
நீயா?

அதனால் கவலையை விட்டு மீண்டெழுவாய்.

மலர் சின்னையா

# பிஞ்சு முகத்தின் தேடல்

மனோன்மணி சண்முகதாஸ்



எனக்கு கால் வலிக்கிறது... கையில் இருந்த பையும் கனக்கிறது. பஸ்சில் வரும் போது பயணம் மகிழ்ச்சியாக இருந்தது. பத்து மணி நேரம் போனதே தெரியவில்லை. ஆனால் இப்போது..! மனத்தில் ஒரு மூலையில் ஏதோபயம் தோன்றியது. தெருவில் யாருமே இல்லை...! தெருவுக்கு அப்பால் கடல்... நிசப்தமாக இருந்தது. இந்தக் கடல்தான்! என் கண்களால் கடலை அளந்தேன். நீலம், பச்சை, கருநீலம்... இது என்ன மாறி மாறித் தெரியுது. வெயில் ஏறிக் கொண்டிருந்தது. கடலின் நிறம் நீலம் என்று தான் இதுவரை நினைத்திருந் தேன். இது என்ன பலவகையான நிறம்... கரையைப் பார்த்தேன். ஒரே கட்டடச் சிதறல் ... வீடுகள் இந்த இடம் வெறிச் சோடிக் கிடந்தது.

சட்டைப் பையில் அப்பா எழுதி வைத்த முகவரி... நினைவுக்கு வரவே, அதை எடுத்துப் பார்த்தேன்! வீட்டு இலக்கம் இல்லை. கடற்கரை வீதி... அது வீதியின் பெயர். அதற்கு மேல்.. வீட்டின் பெயர்... ! 'கானற்சோலை' எனக்கு அந்தப் பெயர்! ... முதலில் அப்பா சொன்னபோது விளங்கவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்னர் தான் என்னுடைய பயணம் உறுதிப்படுத்தப் பட்டது. நான் பிறந்தது... கண்டியில்... நான் பிறந்த உடனேயே அம்மாவை விழுங்கி விட்டேனாம்!... இது என்னு டைய சித்தியின் புராணம்! அப்பா! எனக்கு ஒரு வயதான போது சித்தியைத் திருமணம் செய்தாராம். ஆனால் 10 வருடங்களாகியும் குழந்தைகள் பிறக்க வில்லை. சித்தியை எல்லோரும் 'மலடி' என்று சொல்லுவார்கள்... அவளுக்கு அதைக் கேட்டுக் கேட்டு மனம் பேத லித்து விட்டுது... ஒருநாள் நானும் அப் பாவும் வெளியே போய்விட்டு வீட்டுக்கு வந்தபோது, சித்தியைக் காணவில்லை எல்லோரிடமும் விசாரித்தோம்... ! பய னில்லை. அவள் போகும்போது தன்னு டைய நகைகளையும் அப்பாவின் சேமிப் புக் கணக்குப் புத்தகங்களையும் கொண்டு போய்விட்டாள். அப்பா பாவம்!.. இடிந்து போய்விட்டார். நல்ல காலம் வேலையை மட்டும் விடவில்லை. அவருக்கு ஆஸ்பத்திரியில் வேலை. நோயாளர்களின் உணவுத்தயாரிப்பை மேற்பார்வை செய்வது அவருடைய வேலை. சிலவேளை இரவிலும் அங் கேயே தங்கி நின்று விடுவார். காலையில் வருவார். அவர் அப்படி வரும்போது சித்தி எதுவும் பேசமாட்டாள். ஆனால்... அன்று வீட்டில் சமையல் நடக்காது.. வீடே மௌனமாக இருக்கும். அப்பா கடையில் உணவு வாங்கிவருவார்...! இது அநேகமாக ஞாயிற்றுக்கிழமையில் நடக்கும்...!

எனக்குப் பள்ளிக்கூடம் வீட்டிலி ருந்து கூப்பிடு தூரம் ... நடந்தே போவேன். சிலவேளைகளில் சனிக் கிழமையிலும் பள்ளிக்கூடம் நடக்கும். ஞாயிற்றுக்கிழமையும் வைத்தால் நல் லது என்று நினைப்பேன். இரண்டு வாரங்களுக்கு முன்னர் அப்பாவுக்குக் கடும் காய்ச்சல் வந்தது. ஆஸ்பத்திரியில் மருந்து வாங்கி வந்தார்... வேலைக்குப் போகவில்லை. எனக்கும் பள்ளிக்கூடம் விடுமுறை... வீட்டில் அப்பாவுக்குத் துணையாக இருந்தேன். டிசம்பர் 26 ஆம் திகதி! அப்பா கொஞ்சம் உடல் தேறிவிட்டபடியால், எழுந்து நடமாடி னர். நான் எனக்குத் தெரிந்த படி கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தேன். திடீரென வானொலியில் ஒரு செய்தி... கடற்கொந் தளிப்பு... பெருவெள்ளம்... மக்கள் ஓட்டம்... குழந்தைகள்... நீரில் தத்தளிப்பு... அப்பா!... அவர்... செய் தியைக் கேட்டுக் கொண்டிருந்தவர் அப் படியே சாய்ந்துவிட்டார். நான் ஓடிப் போய் அப்பாவைத் தூக்க முயன்றேன். முடியவில்லை...!

அப்பாவின் இறுதிக் கிரியைகள் நடந் தன. நான் அழுதேன்! 'அப்பா நீங்கள் என்னைத்தனியாக விட்டிட்டுப் போயிட் டீங்களே' எல்லோரும் தேற்றினர். நான்...! தனிமரமானேன். 10 நாள் கழிய.. வீட்டுக்காரர் வந்து என்னை அப்பம்மாவிடம் அனுப்பிவைக்கப் போவதாகச் சொன்னார்கள். அப்பாவின் நண்பர் ஒருவர் என்னைப் பஸ்சில் ஏற்றி விடுவதாகச் சொன்னார். நான் தலையை அசைத்தேன்.! வேறென்ன செய்ய லாம்!... கொஞ்சம் உடுப்பும் ... அப்பாவின் படம்...! அம்மாவை எனக் குத் தெரியாது. அப்பாவின் சிறிய சூட் கேஸ் அதைத்திறந்தேன்! மனம் அழு தது!.. கொஞ்சப் பணம் கிடந்தது... சில கடிதங்கள்... பிரித்துப் பார்த்தேன்! மணி யான எழுத்து...! கீழே கையொப்பம்! ... ஓ! ... அம்மாவின் பெயர் !... அம்பிகை என்மனம் இப்போது துள்ளியது ... அம்மா இல்லாவிட்டாலும், அவள் கையால் எழு திய கடிதம் ...ஓ! அப்பா!... நீங்கள் அம்மாவை மறக்கவில்லை...! கடிதத்தில் முகவரியைப் பார்த்தேன். கனற்சோலை கடற்கரைவீதி பருத்தித்துறை. எழுதப் பட்ட திகதி 15 வருடங்களுக்கு முன் னால்... 1980 ஆம் ஆண்டு ... ஓ! நான் பிறப்பதற்கு முன்பு... எல்லாக் கடிதங் களையும் பத்திரமாக எடுத்து மீண்டும் சூட்கேசில் வைத்தேன். இன்னொரு கடி தம் ... அப்பம்மாவுக்கு அனுப்பவென அப்பா எழுதியது. அதை அனுப்பாமலே அப்பா போய்விட்டார்... பிரித்துப் படித் தேன்.

'அம்மா ! எனக்குக் காலம் கிட்டி விட்டது! இன்னும் கொஞ்ச நாட்கள் தான்! .. என்ரை செல்லக்கிளியை உன்னட்டை ஒப்படைக்க வேணும் ... என்னாலை பயணம் செய்ய முடியாது. நீ வந்து அவளைக் கூட்டிக் கொண்டு போக வேண்டும். அப்பாவின்ரை கோபத்துக் குப் பயந்து நான் கண்டிக்கு வந்தேன்... ஆனால் இப்ப எல்லாம் போய்.. (அப் பாவின் கண்ணீர்த்துளி பட்டு எழுத்து அழிந்திருந்தது...) என் குடும்பத்துடன் சேர விரும்புகிறேன்.!

நான் மேலே படிக்கவில்லை! இதைக் கொண்டு போய் அப்பம்மாவிடம் காட்டினால், நான் அவவோடை இருக் கலாம். நான் அவசரமாகச் சூட்கேசைப் பூட்டி எடுத்துக் கொண்டு புறப்பட் டேன்...!

இப்போ! ... நினைவு கலைய மீண்டும் கடலைப் பார்த்தேன்... அது இப்போது அமைதியாக இருந்தது. தெருவோரம் ஒரே இடிபாடுகள். அந்தக் கற்குவியல் களுக்கு மேலே ஒரு பெயர் பொறித்த பலகை... அதை எடுத்துப் படித்தேன்! கானற்சோலை. அம்மாவின் கடிதம் நினை வில் வரப்... பெயர் இதுதான்!... ஆனால் வீடு... அம்மா!... ஒரு சுவர் மட்டும் நான் வீட்டை நெருங்கினேன்! .. அந்தச் சுவரில் ஒரு படம் அதில் அப்பா!.. மீசையோடு சிரித்துக் கொண்டு நின் றார். பக்கத்தில் இதுதானா ... என் அம் மாவா! ஓ!... அம்மா என் உள்ளம் தவிர்த்தது... என் குடும்பம்..! அப்பாவும் அம்மாவும் படத்தில்.. நான் தெருவில் தேம்பி அழுதேன்... கற்குவியலில் இருந்து அழுதேன் திடீரென இரண்டு கார்கள்... தொடர ஒரு வாகனம்...!

எல்லாம் வந்து நின்றன. புற்றீசல் போல பலர் எங்கிருந்தோ ஓடி வந்தார் கள்! அவர்கள் முகத்தில் ஒரு சோகம் கவிந்து கிடந்தது. வாகனத்தில் வந்த வர்கள் எல்லோரும் இறங்கினார்கள். அவர்களுடன் வெள்ளக் காரிலிருந்து... காவி ஆடையுடன்.. சடை முடியுடன்.. வெண்தாடியுடன்... ஒரு சாமியார் இறங் கினார்... அவரைக் கண்டவுடன் மக்கள் ஒதுங்கி நின்றனர். அவர் எல்லோரையும் பார்த்து... தெய்வீகமாகச் சிரித்தார்... எல்லோரும் அவரை வணங்கினார்கள்.! நான் அசையவில்லை...! ஆனால் மனம் மட்டும் அவரை மறைவாக வணங்கியது. சாமியார் என்னை நோக்கி வந்தார். நான் இப்போது எழும்பிவிட்டேன். பிள்ளை உனக்கு இனிமேல்...! கஷ்டமில்லை! கடவுள் குடும்பத்துடன் நீ சந்தோஷமாக இருக்கலாம்! அவருடைய குரல் என்னு டைய மனத்தை ஆட்கொள்ள, நான் கைகுவித்து வணங்கினேன். என் கண்கள் நீரைப் பெருக்கின...! சாமியார்! என் கையில் ஒரு படம் தந்தார்.

இதை வைத்திரு எல்லாம் கிடைக் கும். அவர் சொல்லி முடிக்கவும், ஒரு மூதாட்டி என்னை நோக்கி ஓடிவந்தாள். என்ரை குஞ்சு! செல்லக்கிளி அப்பம்மா! இவ தானா! நான் சாமியாரைப் பார்த் தேன். அவர் என்னைப் பார்த்து ஒரு தெய்வீகச் சிரிப்பு சிரித்தார். ஓ! கடவுள் தான் வந்திருக்கிறார்! நான் சாமியார் தந்த படத்தைப் பார்த்தேன். சிவபெரு மான், பார்வதி, முருகன், பிள்ளையார் ஒன்றாக இருக்கும் குடும்பப்படம்.

ஓ இது இனிமேல் என் குடும்பம் என் மனம் நிறைந்தது. நான் திரும்பிக் கட லைப் பார்த்தேன். அது இப்போது அமை தியாக இருந்தது. நான் சாமியார் காரில் ஏறுவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பம்மா என் கையைப் பற்றிக் கொண்டு நடக்கத் தொடங்கினா! எனக்கு இப்போது கால் வலிக்கவில்லை! வெயில் சூடு தெரிய வில்லை!.

☆☆☆☆☆

# உயர் இரத்த அழுத்தம்

''அவருக்குப் பிரஷராம். பிளட் பிரஷராம், லோ பிரஷராம்'' இப்படிப் பிரஷரைப் பற்றிய பிரஷரை அதிகரிக்கும் கதைகள் அடிக்கடி நடமாடுவதுண்டு. இந்த உயர் இரத்த அழுத்தம் பணக்காரர்களை மட்டும்தான் பற்றிக் கொள்ளும் என்றும் கதைகள் உலாவருவதுண்டு. உண்மை அதுவல்ல.

இந்த நோய் யாருக்கு வரும் எனப்பார்த்தால், பணக்காரர்களுக்கு மட்டுமல்ல, ஏழைகளுக்கும் கூடத்தான். பணம் வந்தால், பணம் வந்துவிட்டதே என்ற தைரியத்தில் அளவுக்கு மிஞ்சிச் சாப்பிடுவது, போத்தல் கணக்கில் மதுபானங் களைக் குடிப்பது, சோம்பேறித்தனத்தால் சும்மாவே காலத்தைக் கழிப்பது இவை எல்லாம் உங்களை உயர் இரத்த அழுத்தத்தில் கொண்டு போய் நிறுத்தும்.

உயர் இரத்த அழுத்தம் அதிக ஆபத்தானது என்றால், சாதாரண இரத்த அழுத் தம் ஆபத்தானது அல்ல என்ற அர்த்தம் இல்லை. இரத்த அழுத்தம் என்று வந்தாலே அது பிரச்சினைதான். ஆபத்தானதுதான்.

120 இற்கு 80 என்ற அளவில் இருக்கும் இரத்த அழுத்தம், இயல்பு நிலை அல்லது சாதாரண இரத்த அழுத்தம் எனலாம். வயது ஏற ஏற இந்த அளவு மாறி 140 இற்கு 90 என்ற அளவுக்கு உயர்ந்து வருகிறது. இரத்த நாளங்களில் எப்போது இரத்த ஓட்டம் குறையத் தொடங்குகின்றதோ, அப்போதே இரத்த அழுத்தம் என்ற நோய் வந்துவிடுகிறது.

இதயம், சிறுநீரகம், இரத்தக் குழாய்களில் ஏற்படும் சில குறைபாடுகள் போன்றவை இரத்த அழுத்தத்துக்குக் காரணமாகிவிடுகின்றன.

இதயத்தில் வால்வுகள் மற்றும் தசைநார்கள் சரிவர இயங்காவிட்டால், உடனடியாக இரத்த அழுத்தம் அதிகரித்து விடுகிறது. அதேபோல இரத்தத்தை சுத்தப்படுத்தும் கருவியாகச் செயற்படும் சிறுநீரகம் பழுதடையத் தொடங்கினா லும், உடனடியாக இரத்த அழுத்தம் அதிகரிக்கும்.

சிறு வயதிலேயே காலைக் கடன்களை முறையாகக் கழிப்பது எப்படி என் பதைப் பழகிக்கொள்ளவேண்டும். இந்தப் பழக்கத்தை சரியாகக் குழந்தைகளுக்கு பழக்கிக் கொடுக்காவிட்டால், நடுத்தர வயதில் மலச்சிக்கல், சிறுநீரகக் கோளாறு போன்ற பல பிரச்சினைகளை ஏற்படுத்தும். இதன்முடிவு உயர் இரத்த அழுத்தம் தான். பல படித்த மனிதர்கள், பணக்காரர்களின் உயர் இரத்தஅழுத்தத்துக்குக் காரணம் இவைதான் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உணவில் உப்பு கூடுத லாக இருக்கக் கூடாது.

இரத்தத்தில் உப்புத் தன்மை அதிகமானாலும், ஆபத்துதான். அதே நேரம் உப்புத் தன்மை குறிப்பிட்ட சதவீதத்துக்குக் கீழ் குறைந்தாலும் பாதிப்பு ஏற்படும். எனவே உப்பின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியம்.

சிகரெட், கோப்பி, கொக்கோ போன்றவற்றைக் குடிக்கும்போது புத்துணர்ச்சி ஏற்படுவதாகப் பலர் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். இரத்தம் தூண்டப்படு வதன் அறிகுறிதான் இது. அதாவது – இரத்த அழுத்தத்தைத் தூண்டி விடுவதே நாம் தான். உப்பு உணவு மட்டுமல்ல, நாம் சாப்பிடும் மருந்து கூட இரத்த அழுத்தத்துக்குக் காரணமாகிவிடுகின்றன.

சில மூலிகை மருந்துகளைப் பாவிக்கும் போது, கொஞ்ச நேரத்துக்கு உடல் புத்துணர்ச்சி பெற்றது போல ஓர் உணர்வு வருகிறது. இதற்குக் காரணம் அந்த மருந்தில் இரத்த அழுத்தத்தைத் தூண்டும் சில சக்தி இருப்பதுதான்.

அளவுக்கு மீறி உணர்ச்சி வசப்படுவது, கோப உணர்வு காரணமாகவும் இரத்தக் குழாய்களில் அழுத்தம் ஏற்பட்டு நரம்புகள் முறுக்கேறும்போது தமனி சுருங்குகிறது. அந்த நேரத்தில் இதயப் பகுதியில் இரத்தம் அதிகம் தேங்கும். இதனால் இரத்த அழுத்தம் உயிருக்கே ஆபத்தை உண்டாக்கும்.

இதைத் தவிர்க்கப் போதுமான அளவு ஓய்வு அவசியம். முடிந்தவரை எட்டுமணி நேரமாவது தூங்கவேண்டும். 24 மணி நேரமும் உயர் இரத்த அழுத்தத்தைக் காட்டக்கூடிய பரிசோதனைக் கருவி மூலம், 15 நிமிடத்துக்கு ஒரு முறை இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துப் பார்த்துக் கொள்ளவேண்டும். ஒருநாள் முழுவதும் இதுபோன்ற பரிசோதனை செய்து பார்த்துக் கொண்டால், அடுத்த நாளிலிருந்து உங்களை நீங்களே ஒரு கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள இது உதவும்.

இந்த இரத்த அழுத்த நோய் – காலையில் குறைந்தும், மாலையில் அதிகமாக வும் காணப்படும். பதினைந்து நிமிடமாவது தொடர்ந்து ஓய்வெடுத்த பிறகே இரத்த அழுத்தத்தைப் பரிசோதிக்க வேண்டும்.

பரிசோதனை செய்யும்போது, நோயாளியின் முழங்கை இதயத்துக்கு நேராக இருக்குமாறு வைத்துப் பரிசோதிக்கவேண்டும். முழங்கைக்குக் கீழே வைத்துப் பார்த்தால், 17 புள்ளிகள் வரை அளவு வித்தியாசப்படும்.

ஆறு வாரம் தொடர்ந்து இந்த அழுத்தத்தைப் பரிசோதித்த பிறகுதான் இதற் கான சிகிச்சையைத் தொடங்கவேண்டும்.

# சுனாமி அழிவிலிருந்து நாம் மீண்டும் எழுந்து நிற்போம்!

## நினைவு தினத்தில் பாலகுமாரன்



(ஆழியவளை)

எதிர்காலத்தில் எம்மை நாம் காத்துக்கொண்டு அழிவிலிருந்து எழுந்துநிற்க உறுதிபூணுவோம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தால் கடந்த மாதம் வடமராட்சி கிழக்கில் மரணமானவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், நினைவு கூரும் நிகழ்வும் நேற்று முன்தினம் உடுத்துறையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் -

எமது தேசத்தில் கடற்கொந்தளிப்பால் ஏற்பட்ட உயிரிழப்புகளால் துக்கத்திலும், கண்ணீரிலும் மூழ்கியுள்ளீர்கள். இந்தத் துக்கத்தில் நாங்களும் இணைந்துகொண்டுள்ளோம். நீங்கள் இன்று நன்றாக அழுது உங்கள் கவலையைத் தீர்த்துக்கொள்ளுங்கள். அதேவேளை இன்று நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் உறுதி ஒன்றையும் எடுத்துக்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் எம்மை நாம் காத்துக்கொண்டு அழிவிலிருந்து மீண்டும் எழுந்துநிற்க உறுதி எடுத்துக்கொள்வோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இயற்கை அனர்த்தத்தால் பாதிப்படைந்த சிங்களச் சகோதரர்களுக்கும், முஸ்லிம் சகோதரர்களுக்கும், இந்தியாவில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஏனைய ஆசிய நாட்டு மக்களுக்கும் எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அனர்த்தம் காரணமாக சர்வதேசத்தின் கவனமும் பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் திரும்பியுள்ளது. உதவிகள் உரியவர்களுக்கு சரியான முறையில் சென்றடைய வேண்டும். அறிவியலுக்கு ஏற்ப இயற்கையை மதித்து நாம் செயற்படவேண்டும். இதற்கு ஏற்ப எமது தேசம் எப்படிக் கட்டியெழுப்பப்படவேண்டும் என்பதுபற்றி வெளிநாட்டு, உள்நாட்டு அறிவியலாளர்கள் சிந்தித்துத் திட்டமிட்டுவருகின்றனர்.

கடற்கொந்தளிப்பால் எமது தாயகம் பெரும் அழிவைச் சந்தித்துள்ளது. ஆயிரம் கிலோமீற்றர் கரையோரப்பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளன. இவற்றில் தென் தமிழீழமே பெரும் அழிவைச் சந்தித்துள்ளது. இறந்தவர்களில் அரைவாசித் தொகையினர் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

கடந்த காலங்களில் எங்களை நீங்கள் காத்துநின்றீர்கள், இப்போது உங்களை நாங்கள் காத்து நிற்கின்றோம். இந்த அழவிலிருந்து மீண்டும் நாம் எழுந்துநிற்போம் என்றார். (122)

## வன்னிப் பதிவுகள்



## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜனவரி 28

1921: போரில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்ய ஜேர்மனி 1000 கோடி ஸ்ரேலிங் பவுண்களை நட்டஈடாகத் தரவேண்டும் என்றும், அத்துடன் ஏற்றுமதி வருவாயில் இருந்து ஜேர்மனி 12.5 சதவீதத்தை வரியாகத் தரவேண்டும் என்றும் நேசநாடுகள் ஜேர்மனிக்கு நிபந்தனை விதித்தன.

1932: சீனாவின் ஷங்காய் மாநிலத்தை ஜப்பான் கைப்பற்றிக் கொண்டது.

1958: லேசர் கதிர் முதன்முதலாக இன்றுதான் இயக்கிக் காட்டப்பட்டது. கனடா நாட்டு விஞ்ஞானியான ஆர்தர் லெனார்ட் ஷாலோவும், சார்ள்ஸ் டௌன்ன ஸ்ஸுூம் இணைந்து லேசர் கதிருக்கான காப்புரிமைக்கு விண்ணப்பித்திருந்தாலும், லேசர் கதிரை முதலில் இயக்கிக் காண்பித்தவர் தியோடர் எச் மெய்மன் என்பவராவர்.

1986: விண்வெளிப் பயண வரலாற்றில் மிகத் துயரமான நிகழ்வு நடந்தது. "ஹாலே" வால் நட்சத்திரத்தைக் கண்காணித்து தகவல் அனுப்பும் பணிக்காக அமெரிக்காவால் செலுத்தப்பட்ட "சலஞ்சர் - 51 - எல்" என்ற விண்வெளி ஓடம் ஏவப்பட்ட 73 வினாடிகளுக்குள்ளேயே விண்ணில் 13 கி.மீ தூரத்தில் வெடித்துச் சிதறியது. இதில் அமெரிக்காவின் விண்வெளி வீராங்கனையான ஜூடித் ரெஸ் நெனக், விண்வெளியில் ஆசிரியர் என்ற திட்டத்தின்கீழ் இணைத்துக் கொள்ளப்பட்ட ஆசிரியையான கிரிஸ்டா மக்காலிஃப் ஆகியோர் உட்பட ஆறுபேர் கருகி மாண்டனர்.

1987: தமிழர் தாயகத்தின் கிழக்குப் பகுதியில் கொக்கொட்டிச் சோலைக் கிராமத்தில் இராணுவத்தினரால் தொடர்ந்து மூன்று நாட்கள் நிகழ்த்தப்பட்ட வரலாற்றுப் படுகொலைகளின் தொடக்க நாள்.

தொகுப்பு - சந்துரு

# மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு 5 மாதங்களுக்கே உலருணவு வழங்கமுடியும்!

## அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு 5 மாதங்களுக்கு மட்டுமே உலருணவு நிவாரணம் வழங்குவதற்கு அமைச்சால் முடிவுசெய்யப்பட்டுள்ளதென கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு ஜீவனோபாயக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்ட குடும்பங்களுக்கு, 15 மாதங்கள் மட்டுமே இடம்பெயர்ந்தோருக்கான உலருணவு நிவாரணம் வழங்கமுடியுமென அமைச்சால் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் இவர்களுக்குரிய உலருணவு வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடுகள் இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்ட மாதத்தில் இருந்து, 15 மாதங்கள் முடிவடைந்த நிலையிலும் இவர்களுக்கான உலருணவு இதுவரை வழங்க முடியவில்லை.

இவ்வாறான மக்களின் நிலையைக் கருத்திற்கொண்டு, இவர்களுக்கு மேலும் ஒரு வருடத்துக்கான உலருணவு வழங்குவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

இதற்குரிய அனுமதியைப் பெறுவதற்கு எம்மால் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அனுமதியைப் புனர்வாழ்வு அமைச்சு வழங்கினால் மட்டும் எம்மால் உலருணவு வழங்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பூநகரி பிரதேச விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கல்!

கிளிநொச்சி - பூநகரிப் பிரதேசத்தில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் கீழ் 30 பயனாளிகளுக்கு மரக்கறி விதைகள், சிறு தானியங்கள், மாங்கன்றுகள் போன்றவை வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு அண்மையில் பூநகரிப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செயலகத்தில் இடம்பெற்றது.

பூநகரி விவசாய போதனாசிரியர் சத்தியா நடராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் திருமதி சீ.அருந்தவராஜா, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பூநகரி பிரதேச இணைப்பாளர் வி.சதீஸ், கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் த.சூரியகுமாரன் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## புகுமுகவிழா

கிளிநொச்சி - பூநகரி மகா வித்தியாலய தரம் 1 மாணவர்களுக்கான புகுமுகவிழா நேற்று பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் பொன்.தில்லைநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பூநகரி பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார், பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை மற்றும் சைவ, கிறிஸ்தவ மதகுருமார்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்துகொண்ட னர்.

# தமிழீழ காவல்துறை நடுவப்பணியகத்தில் சுனாமியால் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி

(கிளிநொச்சி)

சுனாமி கடல் அனர்த்தத்தால் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்றுமுன்தினம் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதேபோன்று தமிழீழ காவல்துறை நடுவப்பணியகத்திலும் வணக்க நிகழ்வு இடம்பெற்றது.

தமிழீழ காவல்துறை நடுவப் பணியகத் துணைப்பொறுப்பாளர் பா.இயலரசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் -

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றி அரைக்கம்பத்தில் பறக்கவிட்டார். தமிழீழ காவல்துறைக் கொடியை தமிழீழ காவல்துறைப் பரிசோதகர் பொ. பவானி ஏற்றிவைத்தார்.

அகவணக்கத்தைத் தொடந்து அமைதி வணக்கம் செய்யப்பட்டது. தொடர்ந்து காவல்துறைப் பொறுப்பாளர் பொதுச் சுடரை ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் காவல்துறை கண்காணிப்பாளர்கள், போராளிகள், காவல்துறை பிரதம பரிசோதகர்கள், பரிசோதகர்கள், உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை வடமுனை கட்டளைப் பகுதியில் ஒருங்கமைக்கப்பட்ட இடத்திலும் வணக்க நிகழ்வு இடம்பெற்றது. போராளி முத்தாளன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் -

பொதுச் சுடரை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி பொறுப்பாள்களில் ஒருவரான ரமணன் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசிய கொடியை வடமுனைத் தளபதிகளில் ஒருவரான ஜெரி ஏற்றிவைத்தார்.

உயிரிழந்த மக்கள் நினைவான ஈகச்சுடரை பயிற்சி ஆசிரியர்களில் ஒருவரான புயல் ஏற்றிவைத்தார். மலர் வணக்கத்தை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் பொறுப்பாளர்களில் ஒருவரான நாகதேவன் ஆரம்பித்து வைத்தார்.

நினைவுரையை வடமுனைச் சேர்ந்த போராளி மகிழன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் பெருமளவிலான போராளிகள் கலந்து தமது வணக்கத்தைச் செலுத்தினர்.



தூண்கள் மட்டும் நிறுத்தப்பட்ட நிலையில் இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் உள்ள மாங்குளம் பொதுச் சந்தையின் தோற்றம்.


## பூநகரி ஆரம்ப சுகாதார நிலையத்தை திறக்குமாறு மக்கள் கோரிக்கை!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி 4 ஆம் கட்டை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு 4 மாதங்கள் முடிவடைந்த நிலையிலும், இதுவரை கட்டடம் திறந்து வைக்கப்படவில்லை.

இதனால் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்களும், அண்டிய பிரதேசங்களான தெளிகரை, நெடுங்குளம், கவக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களும் 3 கிலோ மீற்றர் தூரம் சென்றே தமது வைத்தியத் தேவையைப் பெறவேண்டிய நிலை காணப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





உடுத்துறை பிரதேசத்தில் சுனாமியால் உயிரிழந்தோர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் மக்கள் அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை இயல்பாக
செப்பமும் நாணும் ஒருங்கு.

திருக்குறள்

# நமது நோக்கு

## மீண்டும் அதிகரிக்கும் சர்வதேச அழுத்தம்!

இலங்கைக்கு உதவும் நாடுகளின் ரோக்கியோ உச்சி மாநாட்டில் இந்த அமைப்பிற்கான இணைத்தலைமையாளர்களாகச் செயற்பட்ட அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நான்கு தரப்பினரும், அந்த மாநாட்டு முடிவில் எடுத்த தீர்மானங்களின் அடிப்படையில் இலங்கையில் அமைதி நிலையை நிரந்தரமாக்கவும், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்து அதன்மூலம் பல தசாப்தகால இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வொன்றைக் காணவும் முழுமையாக உதவுவதென்றும், சமாதான முயற்சிகளில் அரசு காட்டும் ஆர்வத்தையும், முன்னேற்றத்தையும் கவனத்திற்கொண்டு, இலங்கைக்குப் பெருமளவில் நிதியுதவிகளை வழங்குவது என்றும் முடிவுசெய்திருந்தமை தெரிந்த விடயமே.

ஆனால், அமைதி முயற்சிகளில் தேக்கநிலை தொடர்ந்ததுடன், ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டு தேர்தல் ஒன்றின் பின்னர் புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமையிலான அரசு பதவியேற்றதும், சமாதான முயற்சிகளில் நிரந்தரமான ஸ்தம்பித நிலை உருவானதுடன், அதன் எதிர்காலமும் சந்தேகத்துக்குரியதானது.

சர்வதேச சமூகம் பல்வேறு வழிகளில் சமாதான முன்னெடுப்புக்களைத் தொடர அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்தபோதும் - அரசின் பேரினவாத குணாம்சமானதும், சமாதானத்தை முன்னெடுக்கும் முயற்சிகளில் அக்கறையுடன் செயற்படுவதாகக் காட்டி சர்வதேச சமூகத்தை ஏமாற்றி காலம் கடத்தியபடியே மீண்டுமொரு யுத்த நகர்வுக்குத் தன்னைத் தயார்படுத்தும் முனைப்புடன் வியூகங்களையும், மூலோபாயங்களையும் வகுக்கக் தொடங்கியதும் வெளிப்படையான விடயங்களேயாகும்.

இருந்தும் ஏற்கனவே பொருளாதாரரீதியில் மோசமான வீழ்ச்சி நிலையில் தத்தளித்த இலங்கை அரசுக்கு ரோக்கியோ மாநாட்டில் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட நிதியைப் பெறாமல் நிமிர்வு ஏற்படுதல் சாத்தியமே இல்லை என்பதால், போரை மீள ஆரம்பிக்கும் அதன் திட்டத்தை அரசால் உடனடியாக நடைமுறைப்படுத்தல் சாத்தியமற்றுப் போயிற்று. எனவே, விடுதலைப் புலிகளுக்கு பல்வேறு வகையிலும் சினத்தையும், நெருக்கடியையும், குழப்பத்தையும் ஏற்படுத்தி அவர்களைப் போர்க்கோலம் கொள்ள வைத்து யுத்தத்திற்கான பழியை அவர்கள் மீது போட திட்டமிட்ட அரசுக்கு அதிலும் தோல்வியே ஏற்பட்டது.

எனவே, மாற்று வழிகளைத் தேடும் அரசின் முயற்சிகளுக்கு சுனாமி ஆழிப்பேரலை அனர்த்த அழிவுகள் ஏதோ வாரு வகையில் கைகொடுக்கவே செய்தது எனலாம். சமாதானத்தையே நிதியுதவிகளுக்கு மாற்றீடாகக் கேட்ட சர்வதேச சமூகத்துக்கு - பாதிக்கப்பட்ட மக்களினதும், மண்ணினதும் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக மனிதாபிமான ரீதியில் நிவாரண உதவி, நிதி உதவியென அள்ளிக் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஆழிப்பேரலை அனர்த்தம் இன ஒருமைப்பாட்டுக்கும், பரஸ்பர புரிந்துணர்வுக்கும் வழிவகுக்கும் என நினைத்த சர்வதேச சமூகம், நிவாரணப் பணிகளில் அரசு காட்டிய பாகுபாடு காரணமாகவும், பக்கச்சார்புச் செயற்பாடுகள் காரணமாகவும் ஏமாற்றமடைந்த நிலையில், அரசினதும் அதன் பங்காளிகளான ஜே.வி.பியினதும் அணுகுமுறைகளால் அதிருப்தியும், வெறுப்பும் கொண்டதுடன், தமது கண்டனத்தை வெளிப்படையாகவும் தெரிவித்தது. ஐரோப்பிய ஒன்றியம் இதில் முன்னின்றது எனலாம்.

இது அரசு எதிர்பார்க்காத ஒன்றேயாகும். ஒரு தேசிய அனர்த்தத்திலிருந்து நாடு மீளெழுச்சி பெற இன, மத, மொழி வேறுபாடுகளுக்கப்பால் மனிதநேயப் பண்புடன், ஒருமைப்பாட்டு உணர்வுடன் சகலரும் உழைக்கவேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புக்கு அரசு சாதகமான சமிக்ஞை எதையும் தெரிவிக்கவில்லை என்றே கூற வேண்டும்.

ஆனால், சர்வதேச சமூகம் விடுவதாக இல்லை. இரு தினங்களின் முன்னர் இந்த இணைத் தலைமை நாடுகள் நான்கினதும் பிரதிநிதிகள் - பெல்ஜியம் நாட்டின் தலைநகர் பிரஸெல்ஸில் கூடி இலங்கையில் சுனாமியால் ஏற்பட்ட அழிவு குறித்தும், சமாதான முயற்சிகளின் எதிர்காலம் பற்றியும் விரிவாக ஆராய்ந்ததுடன் அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுகளையும் விவாதித்துள்ளனர்.


இதனடிப்படையில் அரசையும், விடுதலைப் புலிகளையும் நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானப் பணிகளில் இணைந்து செயற்படுமாறு அந்த நாடுகள் கோரிக்கையொன்றை விடுத்துள்ளதுடன், சமாதான முயற்சிகளையும் உறுதிப்படுத்துமாறும் கேட்டுள்ளன.

இந்த இணைத் தலைமை நாடுகளின் வலியுறுத்தலானது அரசுக்கு மற்றுமொரு அழுத்தமாகவே இருக்கப் போகிறது என்பதே உண்மையாகும்.

அரசும் - புலிகளும் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளில் இணைந்து செயற்படுவதையும், அதன்மூலம் சமாதான முயற்சிகளுக்கு உரமூட்டுவதையும் அரசின் பங்காளிகளான ஜே.வி.பியும் ஏனைய பேரினவாத - சமாதான விரோத சக்திகளும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பது உறுதி.

இந்த நிலையில் நிறைவேற்று அதிகார வலுக்கொண்ட ஜனாதிபதி என்ன முடிவு எடுக்கப்போகிறார் என்பதே இப்போதைய கேள்வியாகும்.

## நாடும் நடப்பும்




# கல்வியும் ஒழுக்கமும் தனியார் கல்வி நிலையங்களிலேயே தங்கியிருக்குமா?

"இந்தக் காலத்துப் பள்ளிக்கூடப் பிள்ளைகள் பற்றி நீதிபதி ஒருவர் சொல்லியிருக்கிறாரே பார்த்தீரா?" என்று கேட்டபடியே எதிரில் வந்து அமர்ந்தார் பரமசிவம்.

வழமைக்கு மாறாக வேட்டி சால்வையுடன் காட்சியளித்தார்.

"மாப்பிள்ளைக் கோலத்தில் பந்தாவாக வந்திருக்கின்றீர் இனி உம்மைப் பந்தா பரமசிவம் என்று அழைக்கலாம் போலிருக்கிறதே" என்றேன்.

"நீர் எப்படியாவது அழைத்துக் கொள்ளும் நான் சொன்னது கேட்டதா?" என்றார் பரமசிவம்.

"அப்படி என்னத்தை நீதிபதி சொல்லியிருக்கிறார்" என்றேன்.

"பல்கலைக்கழக பிரவேசப் போட்டிகள். வெட்டுப் புள்ளிகள் வருடம்தோறும் அதிகரிக்கும் போது மாணவர்களின் சுமை பலமடங்கு அதிகரிக்கிறது. செய்தித்தாள்களைக்கூட படிக்க நேரமில்லாது மாணவர்கள் கற்பதற்காகக் கல்வி நிலையங்களுக்கு ஓடிக்கொண்டிருக்கின்றனர். கல்வி வர்த்தக மயமாக்கப்பட்டு தனியார் கல்வி நிலையங்கள் பெருகி உள்ளன. கல்லூரி ஆசிரியர்களின் கட்டுப்பாட்டுக்கும், செல்வாக்கிற்கும் தூரமாகவே மாணவர்கள் சென்றுவிட்டனர். இதனால் மாணவர்களிடையே ஒழுக்கமின்மை அதிகரித்துவருகின்றது" என்று யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா. ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பேசுகையில் சொல்லியிருக்கிறார் என்றார் பரமசிவம்.

உண்மையைத்தானே அவர் சொல்லியிருக்கிறார். செய்தித்தாள்களைப் படிப்பதற்கு மாணவர்களுக்கு மட்டும்தானா நேரமில்லை. ஆசிரியர்கள் பலரும்கூட செய்தித்தாள்கள் படிக்கும் பழக்கத்தைக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லையே என்றேன்.

"அதுவும் உண்மைதான். என்றாலும் அந்தக் காலத்தில் பாடசாலை அதிபரானாலும், ஆசிரியர்களானாலும் தனது வகுப்பில் தன்னிடம் படிக்கும் மாணவனில் மட்டுமல்ல பாடசாலையில் படிக்கும் மாணவர் ஒவ்வொருவரைப் பற்றியும் அவரது குடும்பநிலையிலிருந்து கல்வி கற்பதுவரை அறிந்து. அவரது கல்வியில் ஏற்படும் முன்னேற்றத்திலும், பழக்கவழக்கங்களிலும் கவனம் செலுத்தி அக்கறையுடனும், ஆர்வத்துடனும் முன்னேற்றுவதைக் கவனிப்பார்கள் என்றார் பரமசிவம்.

சில பாடங்களில் படிப்புக் குறைவாக இருப்பவர்களைப் பாடசாலை முடிந்தவுடன் மாலைவேளையில் தடுத்துவைத்துப் பாடம் சொல்லிக் கொடுப்பார்கள். இல்லையேல் தங்கள் வீட்டுக்குவந்து காலையில் அல்லது மாலையில் படிக்கும்படி கூப்பிட்டுச் சொல்லிக்கொடுப்பார்கள். சனி. ஞாயிற்றுக் கிழமைகளில் தங்கள் ஓய்வு நாட்களைத் தியாகம் செய்து சொல்லிக்கொடுப்பார்கள். வீட்டில் இந்தப் பிள்ளைகளுக்குச் சில சமயங்களில் தங்கள் செலவில் தேநீரும் கொடுப்பதுண்டு என்று சொன்னேன்.

"இதனால்தான் பிள்ளைகள் ஆசிரியர்களுக்கும், பெரியோர்களுக்கும் மதிப்பும், மரியாதையும் செலுத்திவந்தனர். ஆசிரியர்களும் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தனர். மாணவர்களும் ஒழுக்கசீலராய் வந்தனர். இதைத்தான் நீதிபதி விக்னராஜா ஒழுக்கம், நன்னடத்தை, பெறுமான முறைமைகள், பண்புடமை, ஒழுங்கான வரவு, சீரிய மனப்பான்மை, முதியோரைக் கனம் பண்ணுதல், இரக்கசிந்தனை, நீதியான தீர்மானம், நேர்மை போன்ற விழுமியங்கள் கல்லூரி நாட்களில் கற்றுக்கொள்ள வேண்டும்." என்றும் குறிப்பிட்டார் பரமசிவம்.

முன்பெல்லாம் அதிபர்களோ, ஆசிரியர்களோ அடிக்கடி இடமாற்றம் செய்யப்படாமல் ஒரே கல்லூரியில் சேவையாற்றிவந்தனர். இப்பொழுது அதிபர்களும், ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்படுவதும் அவர்கள் பிள்ளைகள் மீது அக்கறை செலுத்தாததற்குக் காரணமாக இருக்குமோ என்றேன்.

அப்படியும் ஓரளவுக்குச் சொல்லலாம். என்றாலும் இப்போது பணம் தேடுவதே முக்கியமாகிவிட்டது. தனியார் கல்வி நிலையங்களில் பாடம் போதிப்பவர்கள் பெரும்பாலும் கல்லூரிகளில் படிப்பிக்கும் ஆசிரியர்கள்தானே என்றார் பரமசிவம்.

ஒருசிறிய இடத்தில் ஒரு கொட்டில்போட இடம் கிடைத்தால் தனியார் கல்வி நிலையம் ஒரு பெயரில் உருவாகிவிடும். படிப்பிக்கும் ஆசிரியர் பெயர்கள், அவர்கள் படிப்பிக்கும் பாடங்கள் சினிமா சுவரொட்டிகள் போல் காட்சியளிக்கும். பிள்ளைகள் ஓடிவரும் சைக்கிள்கள் வீதியில் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்தாலும் வீதியில் நிறுத்திவைக்கப்படும். பெண்பிள்ளைகள் மலம், சலம் விடுவதற்குக்கூட எந்த வசதியுமிருக்காது. ஆனாலும் பிள்ளைகள் ஒவ்வொரு பாடத்துக்குமென ஒவ்வொரு தனியார் பாடசாலைக்கும் ஓடியோடிச்சென்று படிக்கிறார்கள் என்றேன்.

பள்ளிக்கூடத்தில் ஒழுங்காகப் படிப்பித்தால் இவர்கள் தனியார் கல்வி நிறுவனங்கள் தேடிப்போகவேண்டி வருமா என்று கேட்டார் பரமசிவம்.

ஒரு உயர்தர வகுப்பு பரீட்சையில் ஒரு கல்லூரியில் பத்துப் பாடங்களிலும் அதிக பிள்ளைகள் மிகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தார்களாம். அந்தக் கல்லூரியின் வகுப்பு ஆசிரியைக்குப் பாராட்டும், பரிசும் கொடுக்கவேண்டுமென்று யாரோ தூண்டிவிட்டார்கள். பிள்ளைகள் பெற்றோரை நச்சரித்தார்களாம். இந்தச் சமயம் ஒருசில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு உரத்த குரலில் நீங்கள் அதிக புள்ளிகள் எடுத்துச் சித்தியடைந்ததற்கு. நீங்கள் இந்தப் பாடங்களைப் படித்த தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்குத்தான் பாராட்டும், பரிசும் கொடுக்கவேண்டும். இதற்குக் கஷ்டப்பட்டுப் பணம்கொடுத்த எங்களுக்கும் பாராட்டும், பரிசும் தருவதே பொருத்தம் என்றனராம் என்றேன்.

பிள்ளைகள் விட்டுவைத்திருப்பார்களாக்கும் என்று சொல்லிக்கொண்டே எழுந்தார் பரமசிவம். போகும்பொழுது என்றாலும் தனியார்கல்வி நிலையங்களின் வளர்ச்சியில் மட்டும் நமது கல்வி, ஒழுக்கம், வாழ்க்கைமுறை நீண்டகாலம் தங்கியிருக்கமுடியாது என்று சொல்லிவிட்டுப் போனார்.

## வாசகர் நோக்கு!

### நினைவு கூரலுக்கும் நேரமுண்டு

கண்டி தலதா மாளிகை மீது ஏழு ஆண்டுகளுக்கு முன் நடந்த குண்டுத் தாக்குதலை நினைவு கூரும் கண்டன சுவரொட்டிகள் கண்டி நகரெங்கும் ஒட்டப்பட்டுள்ளன என்று ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

இப்படியான தாக்குதல்களை நினைவுகூருவதானால், நாட்டில் ஒரு நகரம்கூட இந்த நினைவு கூரலில் இருந்து தப்பமுடியாது.

வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல மாவனல்ல, காலி, திருகோணமலை, கொழும்பு, பொலநறுவை, அனுராதபுரம் என்று ஒவ்வொரு நகரிலும் ஒவ்வொரு பிரிவினரும் சம்பவங்களையும் தாக்குதல்களையும் நினைவுகூர்ந்து கொண்டே இருக்க நேரிடும்.

நடந்தவைகள் நடந்தவையாகட்டும். சுனாமிக்குப் பின் நடப்பவை நல்லவையாகட்டும்.

மல்லாகம் - மங்களம்

பகுதி XXI

சங்கர்



# காற்றே நீ எம் கதை கேளாயோ... கடலே நீ எம் நிலை உணராயோ...

கிரான் பிரதேச செயலர் பிரிவில் எழுபத்தைந்து பேர் உயிரிழந்துள்ளனர். இருவர் காணாமற்போயுள்ளனர். அறுபத்து மூன்று வீடுகள் முற்றாக .அழிந்துள்ளன. ஐநூற்றி ஐம்பது குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து இருநூறு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 69 குடும்பங்களைச் சேர்ந்த 215 பேர் நலன்புரி நிலையமொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

செங்கலடிப் பிரதேச செயலர் பிரிவில் ஐம்பத்திநான்கு பேர் உயிரிழந்துள்ளனர். நூற்றிப்பதினான்கு பேர் காணாமற் போயுள்ளனர். நூற்றி முப்பத்தேழு வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. இருநூற்றி பதினாறு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. ஐயாயிரத்து எழுபத்து மூன்று குடும்பங்களைச் சேர்ந்த இருபதினாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றிரெண்டு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நூற்றிநாற்பத்தியேழு குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. நாநூற்றி எழுபதுபேர் மூன்று நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஆயிரத்து இருநூற்றி முப்பத்தாறு குடும்பங்களைச் சேர்ந்த நாலாயிரத்து முந்நூற்றி எழுபத்து மூன்று பேர் நண்பர்கள் உறவினர்கள் இல்லங்களில் தங்கியுள்ளனர்.

ஆரையம்பதிப் பிரதேச செயலர் பிரிவில் நாற்பது பேர் உயிரிழந்துள்ளனர். பதின்மூன்று பேர் காணாமற்போயினர். ஆயிரத்து இருநூற்றி இருபத்தொரு வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. ஆயிரத்து முந்நூற்றி முப்பத்தாறு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. மூவாயிரத்து எண்ணூற்றி எண்பத்தொரு குடும்பங்களைச் சேர்ந்த பதினையாயிரத்து ஐநூற்றி இருபத்து நான்கு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரத்து ஐநூற்றி ஐம்பத்தொரு குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. ஐயாயிரத்து நானூற்றி இருபத்தேழு பேர் ஐந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அறுநூற்றி இருபத்தைந்து குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து இருநூற்றி ஐம்பத்தாறு பேர் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலர் பிரிவில் முப்பத்தொன் பது பேர் உயிரிழந்துள்ளனர். இரு வர் காணாமற்போயுள்ளனர். இங்கு ஆயிரத்துத் தொளாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த தொளாயிரத்து அறுநூறு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெல்லாவெளிப்பிரதேச செயலர் பிரிவில் இருபத்தொரு பேர் உயிரிழந்துள்ளனர். ஐவர் காணாமற்போயுள்ளனர். நாலாயிரத்து இருநூற்றி எழுபது குடும்பங்களைச் சேர்ந்த பதினேழாயிரத்து எண்பது பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நாற்பத்தி ஆறு குடும்பங்களைச் சேர்ந்த நூற்றி இருபது பேர் நலன்புரி நிலையமொன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வவுணதீவு பிரதேச செயலர் பிரிவில் இருபத்தொரு பேர் உயிரிழந்துள்ளனர்.



பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவில் பத்தொன்பது பேர் உயிரிழந்துள்ளனர். மூவாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த பன்னிரண்டாயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நூற்றி ஐம்பத்து மூன்று குடும்பங்களைச் சேர்ந்த அறுநூற்றி ஐம்பத்தேழு பேர் இரண்டு நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

ஓட்டமாவடிப் பிரதேச செயலர் பிரிவில் நால்வர் உயிரிழந்துள்ளனர். எண்ணூறு குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரத்து இருநூறு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏறாவூர் பிரதேச செயலர் பிரிவில் ஒருவர் உயிரிழந்துள்ளார் நூற்றி எழுபத்தைந்து குடும்பங்களைச் சேர்ந்த எழுநூறு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நலன்புரி நிலையங்களைப் பொறுத்தவரை புனித சிசிலியா, கன்னியர் மடத்தில் 230 குடும்பங்களைச் சேர்ந்த 726 பேரும். இசை நடனக்கல்லூரியில் 663 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 667 பேரும், சென்திரேசாவில் 145 குடும்பங்களைச் சேர்ந்த 594 பேரும், மகாஜனாக் கல்லூரியில் 290 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 160 பேரும், புனித மைக்கல் கனிஷ்ட பாடசாலையில் 131 குடும்பங்களைச் சேர்ந்த 519 பேரும், மெதடிஸ்த மத்திய கல்லூரியில் 394 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து தொண்ணூற்றி நான்கு பேரும் தங்கியுள்ளனர்.

பண்பாட்டு மண்டபத்தில்225 குடும்பங்களைச் சேர்ந்த 880 பேரும், இந்துக் கல்லூரியில் 608 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 736 பேரும், கோட்டை முனை கனிஷ்ட பாடசாலையில் 610 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 553 பேரும் தங்கியுள்ளனர்.

இதேபோல், சிவானந்தா வித்தியாலயத்தில் 225 குடும்பங்களைச் சேர்ந்த 900 பேரும், விவேகானந்தா பெண்கள் பாடசாலையில் 552 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 613 பேரும், மெதடிஸ்த சிறுவர் பாடசாலையில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 165 பேரும், பூநொச்சி முனை பள்ளிவாசலில் 75 குடும்பங்களைச் சேர்ந்த 498 பேரும், பெரிய போரதீவு காளி கோவிலில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேரும் -


கறுவாக்கேணி பெந்தக்கோஸ்தே தேவாலயத்தில் 416 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 263 பேரும், கல்மடு விநாயகபுரம் விநாயகர் வித்தியாலயத்தில் 167 குடும்பங்களைச் சேர்ந்த 474 பேரும், கதிரவெளி விக்னேஸ்வரா பாடசாலையில் 413 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 726 பேரும், அம்மந்த வெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 256 குடும்பங்களைச் சேர்ந்த 902 பேரும், ஊரியான் கட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 396 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 217 பேரும், வட்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில்128 குடும்பங்களைச் சேர்ந்த 441 பேரும், கோப்பா நகரம் தற்காலிக பாடசாலையில் 379 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 387 பேரும், கிரு மிச்சை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 90 குடும்பங்களைச் சேர்ந்த 338 பேரும், கண்டலடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 220 குடும்பங்களைச் சேர்ந்த 783 பேரும், மாங்கேணியில் 414 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 108 பேரும், பனிச்சங்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 321 குடும்பங்களைச் சேர்ந்த 854 பேரும் தங்கியுள்ளனர். *(தொடரும்)*

---

செய்திக் கட்டுரை...

கண்ணன்

# மத, சமூகப் பணிகளில் மெதடிஸ்த திருச்சபை



மதங்கள் எல்லாம் தனித் தனியாகச் செயற்பட்டு வந்தாலும், அவை மூலம் நாம் அடையும் பலன்களெல்லாம் ஒரேயிடத்தில் இருந்தே கிடைக்கிறது. ஆறுகள் எல்லாம் கடலில் சங்கமிக்கும் என்பது போல, இந்த வகையில் தான் மதப்பணி நோக்கில் நெடுந்தீவுப் பிரதேசத்தில் 1855 ஆம் ஆண்டில் கால்பதித்த தென்னிந்திய திருச்சபை இன்று மதப் பணியை மிஞ்சி - கல்வி , சமூக பணிகளில் மேலோங்கி நிற்கின்றதென்றால் மிகையாகாது.

1855 தொடக்கம் 1959ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அமெரிக்கன் மிசன் பாடசாலை யாக இருந்து, நெடுந்தீவு மக்களில் பலரை கல்விமான்களாக உயர்த்தியதுடன், வைத்திய, பொறியியல் துறைகளுக்குள்ளும் உள்வாங் கும் அளவுக்கு கல்விப் பணியை நிறைந்த மனத்துடன் நிறைவேற்றி வந்தது.

1960 ஆம் ஆண்டு மிஷன் பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்துக் கொண்டதனால், தங்களது கல்விச் சேவையை நிறுத்திவிடக் கூடாது என்பதற்காகப் பாலர் கல்வியை உருவாக்கியுள்ளமை - ஒரு தீர்க்கதரிசன செயலாக இன்று வியாபித்து நிற்கிறது.

1981 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாலர் கல்வி செயற்பாட்டில் இருந்து வந்த பாடசாலை - தென்னிந்தியச் திருச்சபை வளாகத்தில் இருந்த மிஷன் பாடசாலைக் கட்டடத்திலேயே பாலர் பராமரிப்பு நிலையத்தை ஆரம்பித்து, அதிலே மத வேறுபாடின்றி நெடுந்தீவைச் சேர்ந்த சகல சிறார்களும் கல்வி கற்கக் கூடிய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

இந்தப் பாலர் பராமரிப்பு நிலையத்தில் ஆரம்பக்கல்வி கற்று பாடசாலைகளில் இணையும் மாணவர்கள் கல்வியில் ஊக்கத்துடன் செயற்படுவதுடன் உடல், உள வளர்ச்சியிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்குவது இங்கே சுட்டிக் காட்டத்தக்கது.

நெடுந்தீவு மத்திய பகுதியில் மட்டும் பராமரிப்பு நிலையம் அமைத்து பணியாற்றிய திருச்சபையினர், 1991 ஆம் ஆண்டில் நெடுந்தீவு மேற் கிலும் பராமரிப்பு நிலையத்தை உருவாக்கி அந்தப் பகுதிச் சிறார் களுக்கும் கல்விப் பணியாற்றத் தொடங்கினர்.

நெடுந்தீவு பிரதேசத்தின் சுமார் 75 வீதத்துக்கும் மேற்பட்ட சிறார்கள் தென்னிந்திய திருச்சபையின் பகற் பராமரிப்பு நிலையம் மூலம் ஆரம்பக் கல்வி பெறுகின்றார்கள் என்றால் மிகையாகாது.

பாலர் கல்வியுடன் மட்டும் நின்று விடாமல் வளர்ந்தோருக்கும், பாடசாலைகளை விட்டு விலகியோ ருக்குமென 1954,1983ஆம் ஆண்டுக ளில் தையற் பயிற்சி, தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி வகுப்புகள் போன்றனவும் நடத்தப்பட்டன.

இதேவேளை, நவீன காலத்துக்கேற்ப முதன் முறையாக நெடுந்தீவின் அன்பர்களின் உதவியுடன் தென்னிந்தியச் திருச்சபையினரால் கணினிப் பயிற்சி வகுப்புகள் 2004 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றன. இந்தப் பயிற்சிமூலம் இன்று வரைக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட பெரியோர், சிறியோர் கணினி அறிவைப் பெற்றுள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது.

மேலும் உயர் கல்வியைக் கற்க விரும்பும் வறிய மாணவர்களுக்கும், மற்றும் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கும் இந்தச் திருச்சபையின் கீழ் இயங்கும் யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி போன்றவற்றில் அனுமதிகளைப் பெற்றுக் கொடுத்து, அங்கு கல்வியைத் தொடர பலருக்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளமையும் இங்கு இவர்களது பணியில் ஒன்றாகும்.

இதேபோன்று பாடசாலையை விட்டு விலகியிருக்கும் மாணவர்கள் யாழ் ப்பாணக் கல்லூரியிலும் தொழில்நுட்பக் கல்லூரியில் பயில்வதற்கும் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டு, அதன் மூலம் நெடுந்தீவைச் சேர்ந்த பலரும் பயனடைந்துள்ளனர்.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் இறைபணி நோக்கில் 1855 ஆம் ஆண்டு கால்பதித்த தென்னிந்திய திருச்சபையானது இன்றுடன் 150 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து, கல்வி சமூக பணிகளில் நெடுந்தீவின் வரலாற்றில் ஒரு இடத்தைப் பிடித்து, தொடர்ந்தும் வீறு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இந்தச் சபையினரது பணிகள் மென்மேலும் கிடைக்க இறைவன் துணை நிற்க வேண்டுவதும், 150 ஆண்டு கால பணிக்காக நெடுந்தீவு மக்கள் நன்றியுணர்வுடன் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றனர்.



## கொலம்பிய சிறை மீது மாவோயிஸ்டுகள் தாக்குதல்

கொலம்பிய சிறைச்சாலை மீது மாவோ கிளர்ச்சிவாத சந்தேக நபர்கள் நடத்திய தாக்கு தலையடுத்து அங்கிருந்த சிறைக் கைதிகளில் 20 பேர் தப்பியோடியுள்ளனர்.

இவ்வாறு தப்பியோடிய கைதிகள் மீது சிறைக் காவலர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 சிறைக் கைதிகள் உயிரிழந்ததுடன் மூவர் மீள பிடிக்கப்பட்டனர்.

தப்பியோடிய கைதிகளைத் தேடி பெருமள வான படையினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். தப்பியோடிய கைதி களில் சிலர் கொலம்பிய புரட்சிகர இராணுவ அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப் படுகிறது.

சிறைச்சாலை மீது தாக்குதல் நடத்தப்பட்ட வேளை சிறைச்சாலைக்குள்ளும் குண்டுவெடித் துள்ளது. இந்த வெடித்த குண்டு எவ்வாறு சிறைக்குள் கொண்டு செல்லப்பட்டதென விசா ரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொலம் பிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## உலக நோக்கு

### மனநிலை பாதிக்கப்பட்டவரால் வந்த விபரீதம்

# இரு ரயில்கள் நேருக்கு நேர் மோதின; 11 பயணிகள் பலி; 200 பேர் காயம்!

(லொஸ்ஏஞ்சலஸ்)

**அமெரிக்காவில் மனநோயாளி ஒருவரின் தற்கொலை முயற்சியால் இரண்டு ரயில்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 11 பேர் உயிரிழந்ததுடன் 200 பயணிகள் காயமடைந்தனர். இவர்களில் 40 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

**இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –**

அமெரிக்காவிலுள்ள லொஸ்ஏஞ்சல் நகரை சேர்ந்த ஜீவான் மனுவேல் அல் வார்ஸ் (வயது 25) மனநிலை பாதிக்கப்பட்ட வர். தற்கொலை செய்வதற்காக இவர் ஒரு ஜீப்பில் ஏறி ரயில் நிலையத்திற்கு சென் றார்.

அங்கு ரயில் வரும்போது தண்ட வாளத்திள் குறுக்கே ஜீப்பை நிறுத்தி தற் கொலை செய்ய அவர் திட்டமிட்டிருந்தார்.

அந்த வழியாக ரயில் வந்தபோது ஜீவன் தண்டவாளத்தின் குறுக்கே ஜீப்பை நிறுத்தினார். அப்போது ஒரே நேரத்தில் 2 தண்டவாளங்களில் பயணிகள் ரயில்கள் வந்துகொண்டிருந்தன. ஜீப்பும் இரண்டு தண்டவாளங்களில் நின்றுகொண்டிருந் தது. ரயில்ள் அருகே வந்தபோது கண் இமைக்கும் நேரத்தில் ஜீப்பில் இருந்து கீழே குதித்து ஜீவான் தப் பித்துக் கொண்டர். ஆனால், தண்ட வாளத்தில் நின்றுகொண்டி ருந்த ஜீப்மீது இரண்டு ரயில்களும் நேருக் குநேர் மோதி தீப்பற்றிக் கொண்டன.

இந்த விபத்தில் 11 பேர் பலியானார்கள். 200 பேர் படுகாயமடைந்தனர். விபத்து நடப்பதற்கு காரணமாக ஜீவானை



பொலிஸார் கைதுசெய்தனர். அப்போது அவர் என்னை மன்னித்து விடுங்கள் என்று பொலிஸாரிடம் கதறி அழுதார்.

# வியட்னாமில் இராணுவ ஹெலி விபத்து 13 படையினர் உட்பட பதினாறு பேர் பலி!



வியட்னாமில் இராணுவ ஹெலிகொப்டர் விபத் துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இரண்டு ஜெனரல்கள் உட்பட 13 படையினரும் 3 விமான ஓட்டிகளும் உயிரிழந்ததாக வியட் னாம் தகவல்கள் தெரிவித்தன.

ரஷ்ய தயாரிப்பான இந்தக் ஹெலி மி தீவி லிருந்து பறப்பினை மேற்கொண்ட சிறிது நேரத் தில், விபத்துக்குள்ளானதாக அதிகாரிகள் தெரி வித்தனர். இந்த விபத்தில் உயிரிழ ்த 13 படை யினரதும், 3 விமான ஓட்டிகளதும் சடலங்கள் மீட்கப்பட்டதாக வியட்னாம் இராணுவம் தெரி வித்தது.

இந்த விமான விபத்து தொடர்பாக வியட் னாம் இராணுவம் விசாரணைகளை மேற் கொண்டுவருகிறது.

# சுமாத்ரா தீவில் நேற்று நிலநடுக்கம்

தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேசியாவின் 6000 தீவுகளில் மிக முக்கியமான தீவு சுமாத்ரா ஆகும். இந்த தீவை கடந்த ஒரு மாதமாக தொடர் நிலநடுக்கங்கள் படாதபாடு படுத்தி வருகின்றன.

இதுவரை அங்கு 300 இற்கும் மேற்பட்ட தடவை நில அதிர்வு தோன்றியது. இன்னும் சில மாதங்களுக்கு அங்கு நில அதிர்வு நீடிக்கும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இதனால், சுமாத்ரா தீவு மக்களிடையே பீதி இன்னும் அகலவில்லை.

இந்த நிலையில் நேற்று அதிகாலை 4 மணிக்கு சுமாத்ரா தீவின் வடக்குப் பகுதியின் மேற்கு கடலோரத்தில் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. அது 6.1 ரிக்டர் அளவுக்கு பதிவாகி இருந்ததுடன் சில வினாடிகளுக்கு அது நீடிக்கவும் செய்தது.

இந்தோனேசியாவில் இருந்து சுமார் 305 கிலோ மீற்றர் தொலைவில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததால், அதன் தாக்கம் இந்தோனேசியாவிலும் எதிரொலித்தது. இதனால் மக்கள் பீதி அடைந்தனர்.

ஆனால், தலைநகர் ஜகார்த்தாவுக்கு 1695 கிலோ மீற்றர் தூரத்தில் அதிர்வு ஏற்பட்டதால், தலைநகரில் எந்த சல சலப்பும் ஏற்படவில்லை. நேற்று நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதியில்தான் கடந்த ஒரு மாதமாக அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

# தெற்காசியாவின் பொருளாதார சீரழிவுக்கு இந்தியாவின் ஆயுதக்குவிப்பு வழிவகுக்கும்

### பாகிஸ்தான் பிரதமர் எச்சரிக்கை



பாகிஸ்தானுடன் போட்டிபோட்டுக்கொண்டு இந்தியா ஆயுதக்குவிப்பில் ஈடுபட்டால், தெற்கா சியாவில் பொருளாதார சீரழிவு ஏற்படும் என பாகிஸ்தான் பிரதமர் ஷாகுத் அசிஸ் எச்சரித்துள் ளார்.

ஐரோப்பிய யூனியன் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக 3 நாள் பய ணமாக பாகிஸ்தான் பிரதமர் ஷாகுத் அசிஸ் பிரஸ்ஸல் சென்றுள்ளார். அசிஸ் அங்குள்ள சர்வதேச உறவுகள் என்ற அமைப்பிற்கு அளித்த பேட்டியில் கூறியதாவது –

பாகிஸ்தானுடன் ஒப்பிடும்போது இந்தியா வின் மரபு சார்ந்த படைபலம் மிக அதிகம். குறிப்பாக விமானப்படை மற்றும் கப்பல் படை எண்ணிக்கை அதிகம். இருப்பினும், இந்தியா தொடர்ந்து ராணுவ பலத்தை அதிகரித்து நவீன மயமாக்கி வருகிறது. இதனால், இரு நாடுகளுக் கும் படை பலத்தில் உள்ள இடைவெளி மேலும் அதிகமாகி வருகிறது.

எந்த ஒரு நாட்டுடனும் குறிப்பாக இந்தியா வுடன் ஆயுதப் போட்டியை பாகிஸ்தான் விரும்ப வில்லை. அது மரபு சார்ந்த படையாக இருக் கட்டும். அணு ஆயுத பலமாக இருக்கட்டும். அத னால் இந்தப் பிராந்தியத்தில் பேரழிவு ஏற் படும்.

இத்தகைய போட்டியை பொருளாதார அடிப் படையிலும், தார்மீக அடிப்படையிலும் தாக்குப் பிடிப்பது கடினம் என பாகிஸ்தான் நம்புகிறது. இரண்டு நாடுகளும் பொருளாதாரத் திட்டங்க ளில் முதலீடுசெய்ய வேண்டும். அழிவுக்கு வழி செய்யும் திட்டங்களில் முதலீடு செய்யக்கூடாது. அணு ஆயுதக் கொள்கை குறித்து பொறுப்புட னும், எச்சரிக்கையுடனும் நடந்துகொள்வது என நாங்கள் முடிவு எடுத்துள்ளோம்.

தெற்காசியாவில் பொறுப்பான அணுகு முறையை இந்தியா பின்பற்றும் என நாங்கள் நம்புகிறோம். இந்தியாவுடனான அமைதிப் பேச்சு வார்த்தைக்கு பாகிஸ்தான் முக்கியத்து வம் கொடுக்கிறது. இருப்பினும், இரு நாடுகளுக் கிடையிலான பிரச்சினைக்கு முக்கிய காரணம் காஷ்மீர். இதற்கு எந்த தீர்வும் ஏற்படாதவரை யில் எத்தனை நம்பிக்கையூட்டும் நடவடிக் கைகள் எடுத்தாலும் அதனால் பயனில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### அமெரிக்க இராஜாங்க செயலராக கொண்டோ லீசா பதவியேற்றார்



ஜோர்ஜ் புஷ் அமெரிக்க அதிபராக 2 ஆவது முறையாக பதவியேற்ற பின் இராஜாங்க செய லாளராக கொண்டோ லிசா ரைஸ் என்கிற கறுப்பு இன பெண் மணியை நியமி த்தார். இதுவரை இராஜாங்கச் செயலாளராக இருந்தகொலின்பவல் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட் டுள்ளார்.

இதையடுத்து ரைஸ் நியமனத்திற்கு அமெ ரிக்க செனட் சபையில் வாக்குப் பதிவு நடந்தது. காரசார விவாதத்துக்கு பின்னர் 85 –13 வாக்கு வித்தியாசத்தில் ரைஸ் புதிய இராஜாங்கச் செயலாளராக பதவி ஏற்க அனுமதி வழங்கப்பட் டது. இதையடுத்து அவர் நேற்றுக் காலை இரா ஜாங்க அலுவலகத்திற்கு சென்று பதவியேற்றுக் கொண்டார்.

# சக இராணுவச் சிப்பாய்களை சுட்டுக்கொன்ற ஆப்கான் வீரர்!



ஆப்கான் படைவீரர் ஒருவர் சக படையினர் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐவர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஆறுபேர் காயமடைந்ததாக ஆப்கான் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் ஆப்கானின் தென்பகுதி ஹெல்மான்ட் மாகாணத்திலுள்ள கூட்டணிப் படைகளின் முகாமில் இடம்பெற்றது.

சக படையினரைச் சுட்டுக்கொன்ற இந்தப் படைவீரரை மற்றொரு படைவீர் சுட்டுக்கொன் றார். இந்தப் படைவீரர் ஏன் சக படைவீரர்கள்மீது தாக்குதல்களை நடாத்தினார் என்ற விபரம் தெளிவாகத் தெரியவில்லையென அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலுடன் கூட்டணிப் படைக ளுக்கெதிராக உள்ளவர்களின் தொடர்பிருப்ப தான எந்தவித ஆதாரமும் இல்லையெனவும் கூட்டணிப் படைகளைச் சேர்ந்தவர்கள் எவரும் இந்தச் சம்பவத்தில் காயமடையவில்லையென வும் அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

காயமடைந்த ஆறு படையினரும் கந்தகாரி லுள்ள அமெரிக்க இராணுவ வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# வாக்களிக்க கோருகிறார் புஷ்

நாளைமறுதினம் நடைபெறவுள்ள தேர்த லில் பயங்கரவாதிகளை ஒதுக்கிவைத்துவிட்டு ஈராக் மக்கள் அனைவரும் வாக்களிக்கவேண்டு மென அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஈராக் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2003ஆம் ஆண்டு அமெரிக்க கூட்டணிப் படைகள் ஈராக்மீது படையெடுத்த தினமான நேற்று அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது –

ஈராக் மக்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன். ஈராக்கிய பிரஜைகளது வீரத்தையிட்டு நான் பெருமையடைகின்றேன்.

ஈராக்கிய தேர்தலுக்குப் பின்னர் எவ்வளவு விரைவாக அமெரிக்கப் படையினரின் பணி நிறைவடையுமோ அவ்வளவு விரைவில் அவர் கள் வெளியேறுவர். அமெரிக்கப் படையினர் ஈராக் தேர்தலுக்கு முன்னர் வெளியேறவேண்டு மென எதிரிகள் விரும்புகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஈராக்கில் பரவலாக இடம் பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களில் 6 அமெரிக்கப் படையினரும் 30 இற்கும் மேற் பட்ட பொதுமக்களும் உயிரிழந்தனர்.

ஈராக்கின் வடபகுதியிலுள்ள அர்பில் நகரில் அமைந்துள்ள குர்திஷ்தான் ஜனநாயகக் கட்சி அலுவலகம்மீது நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தற் கொலைத் தாக்குதலில் 20 பேர் பலியானதுடன் 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதனைத் தவிர றியாத் நகரில் இடம்பெற்ற 3 கார்க்குண்டுத் தாக்குதல்களில் ஐவரும், ஈராக் கின் வடபகுதி மற்றும் பாக்தாத் பகுதிகளில் அமெரிக்கப் படையினர் மீதான தாக்குதல் களில் அறுவரும் கொல்லப்பட்டனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கல்வி அமைச்சு அனுமதி அளித்தால் 1000 ஆசிரியர்களுக்கு நியமனங்கள்

(கொழும்பு)

ஆயிரம் ஆசிரியர்களை தெரிவு செய்யும் திட்டத்துக்கமைய தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியலுடன் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கொழும்பு சென்றுள்ளதாகவும், இன்று கல்வி அமைச்சுக்கு பெயர்ப் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டு கல்வி அமைச்சின் அங்கீகாரம் கிடைத்தவுடன் இவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் எனவும், தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் மாகாசிவம் தெரிவித்தார்.

1000 ஆசிரியர்களைத் தெரிவு செய்து நியமனம் வழங்கும் திட்டத்துக்கமையப் போட்டிப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு நேர்முகத்தேர்வு நடைபெற்றது.

நேர்முகத்தேர்வில் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் கல்வி அமைச்சுக்கு இன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் கிடைத்தவுடன் - உடன் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

ஆங்கில பாடத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் சிலர் அடிப்படைத் தகுதியில்லாது இருக்கின்றமையினால் அவர்களுக்குப் பதிலாக புதியவர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னாரில் இன்று கண்டனப் பேரணி!

அரசாங்கத்தின் அடாவடித்தனங்களைக் கண்டிக்கும் முகமாக, இன்று மன்னாரில் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது. இந்தப் பேரணியை மன்னார் வெகுஜன அமைபபுகள் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

அரசு - மன்னார் மாவட்டத்தில் சுனாமி அச்சுறுத்தலினால் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு சரியாக புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை வெளிப்படுத்தும் முகமாகவும், அடாவடித்தனங்களை கண்டிக்கும் முகமாகவும் இன்று காலை 10.00 மணியளவில் மன்னார் அரசினர் வைத்தியசாலைக்கு முன்பு மக்கள் ஒன்றுகூடி பதாதைகள் ஏந்தியவாறு மன்னார் மாவட்ட செயலகத்தை சென்றடைந்து, மாவட்ட அரசாங்க அதிபர் விசுவலிங்கத்திடம் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றை கையளிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் வர்த்தக சங்கத்தினர், தமிழ் மாணவர் ஒன்றியத்தினர், மாதர்சங்கத்தினர், தொழிற்சங்கத்தினர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# நிவாரணப் பொருட்களுடன் தொலைத்தொடர்பு கருவிகள்!

## கட்டுநாயக்கவில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சுனாமி கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப் பொருட்களில் எட்டு அதிசக்கி வாய்ந்த தொலைத்தொடர்புக் கருவிகள் இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் முகவரிக்கு அனுப்பப்பட்டிருந்த இந்த செய்தித் தொடர்புக கருவிகள் வியாபார நிலையத்தில் கைப்பற்றப்பட்டன.

2 இரும்பு பெட்டிகள் மற்றும் கடதாசிப் பெட்டிகள் ஆகியவற்றில் இவை பொதிசெய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு அதிகாரபூர்வ அங்கீகாரமும் இன்றி கொண்டு வரப்பட்ட இந்த தொலைத்தொடர்பு கருவிகள் தொடர்பாக குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (01)

# கொரிய உயர்மட்டக்குழு இன்று யாழ். வருகிறது!

கொரிய உயர்மட்டக் குழு ஒன்று இன்று யாழ். மாவட்டத்துக்கு விஜயம் செய்து சுனாமி புனரமைப்புப் பணிகளைப் பார்வையிடவுள்ளதுடன், யாழ். தொழில்நுட்ப நிறுவன ஆரம்பக் கட்ட வேலைகளையும் நேரில் பார்வையிடும்.

இன்று காலை பலாலி விமான நிலையத்துக்கு வரும் கொரிய நாடாளுமன்ற உறுப்பினர் அன் கில் வொன், கொரிய நாட்டு கொய்கா அமைப்பு தலைவர் கிம் சக் உவைன், நிறுவனங்களின் பணிப்பாளர் யோஸ்ரோய், இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கிம் ஆகியோர் யாழ். தொழில்நுட்ப நிறுவனத்துக்கு வருகை தந்து தொழில்நுட்ப நிறுவனமாக்கும் ஆரம்ப கட்ட பணிகளைப் பார்வையிடவுள்ளனர்.

பின்னர் மதியம் 1.00 மணியளவில் யாழ். செயலகத்துக்கு விஜயம் மேற் கொண்டு அரசாங்க அதிபர் கே.கணேசை சந்தித்து கலந்துரையாடியபின்னர் நெல்லியடியில் அமைந்துள்ள சுனாமி செயலணிக் குழுவில் யாழ். மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

தொடர்ந்து குடத்தனைப் பகுதியில் அமைந்துள்ள நலன்புரி நிலையத்தில் உள்ள மக்களை சந்தித்துப் பேசுவதுடன், சுனாமி தாக்கிய இடங்களையும் பார்வையிடவுள்ளனர்.

## லண்டனில் வசிக்கும்

# 5 ஈழத் தமிழர்கள்மீது கொலைக் குற்றச்சாட்டு!

(லண்டன்)

லண்டனில் வசிக்கும் ஐந்து ஈழத்தமிழர்கள் மீது பிரித்தானியப் பிரஜை ஒருவர் கொலைக் குற்றச்சாட்டு வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

திருக்குமார் சோதிலிங்கம் (வயது 28) என்பவரது கொலையுடன் தொடர்புடையதாகக் குற்றம் சாட்டியே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுகந்தன் நடராஜா (வயது 22), சாந்தன் விஜயகுமார் தர்மலிங்கம் (வயது 31), றஞ்சன் சண்முகநாதன் (வயது 26), மோகன்ராஜ் தங்கராஜா (வயது 26), சந்திரன் செல்வரட்ணம் (வயது 21), ஆகியோருக்கு எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவர்கள் மீதான நீதிமன்ற விசாரணைகள் முடிவுற்றதும் - நாடுகடத்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 98.17 | 99.36 |
| ஸ்ரேலிங் பவுண் | 184.31 | 187.47 |
| யூரோ | 127.83 | 120.36 |
| சுவிஸ் பிராங் | 82.41 | 84.61 |
| யென் | 0.9467 | 0.9676 |

# ஜப்பானிய அமைச்சர் நாளை வருகிறார்!

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பாரிவையிடுவதற்காக ஜப்பானிய பிரதி வெளிவிவகார அமைச்சர் சூசென் தனிகவா மூன்று நாள் விஜயமாக நாளை கொழும்பு வரவுள்ளார்.

நாளை கொழும்பு வரவுள்ள இவர - சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பாரிவையிட்டு அவற்றின் புனரமைப்பு மற்றும் மீள் கட்டுமானம் தொடர்பாகவும் ஆராயவுள்ளார்.

இவர் தனது விஜயத்தின் போது ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்மாகர், மற்றும் நிதியமைச்சர் கலாநிதி, சரத் அமுனுகம ஆகியோருடன் பேச்சுவார்த்தையை நடத்தவுள்ளார்.

இதன் பின்னர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மற்றொரு நாடான மாலைதீவிற்கு பெப்ரவரி முதலாம் திகதி தனது பயணத்தை இவர் மேற்கொள்ளவுள்ளார்.

## சுனாமி...

தங்கியிருக்கும் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிக்குச் சென்று அங்கு தங்கியிருந்த மக்களுடன் உரையாடி ஆறுதல் கூறினார்.

இதன் பின்னர் வடமராட்சி கிழக்குப் பகுதி சென்று அங்குள்ள நிலைமையையும் பார்வையிட்டனர்.

## வெளிநாட்டு...

ஆனாலும் இந்தக் குழுக்களில் யார் அங்கம் வகிப்பர், எவ்வாறு இவை செயற்படுமென்பது இதுவரை திட்டமிடப்படவில்லையெனவும், இவ்வாறு ஏதாவது உடன்படிக்கை இருதரப்பிற்குமிடையே ஏற்பட்டால், அது ஒரு சிறந்த முன்னேற்றமாக அமையுமெனவும் ஏ.பி. தகவல்கள் மேலும் தெரிவித்தன.

## ஒரு பகுதி...

தும் நோக்கில் சுனாமி நிவாரண நடவடிக்கையில் அனைவரும் இணைந்து செயற்படவேண்டும் என நிதியுதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்த மாநாட்டில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனும் கலந்துகொண்டார்.

## நிவாரணக்...

யாற்றிய புனர்வாழ்வு புனரமைப்பு, மீள்கட்டுமானப் பணிப்பாளர் ஹரீம் பீரிஸ் -

சர்வதேச சமூகத்தால் வழங்கப்படும் நிதியுதவிகள் எவ்விதத்திலும் நேரடியாக விடுதலைப் புலிகளிடம் வழங்கப்படமாட்டாது. இதில் மறுபேச்சிற்கே இடமில்லை.

வெளிநாட்டு அரசாங்கங்கள், அரசாங்கமில்லாத ஒரு அமைப்புடன் எவ்வித தொடர்பையும் வைததிருக்க விரும்பமாட்டாது.

எனவே சகல வெளிநாட்டு உதவிகளும் அரசாங்கத்தின் மூலமாகவே செல்லும்.

இதில் அரசாங்கத்தின் கொள்கையில் எந்தவித மாற்றமும் இல்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜே.வி.பியுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி சந்திரிகா முடிவு!



சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை அரசாங்கம் சரிவரசெய்யவில்லையென ஜே.வி.பி கடுமையாக விமர்சித்து வரும் நிலையில், அந்தக் கட்சித் தலைவர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா பேச்சுக்களை நடத்தவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் மூன்று மணி நேரமாக இடம்பெற்ற பின்னரேயே ஜனாதிபதி ஜே.வி.பி தலைவர்களை சந்திக்க முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், ஜே.வி.பியின் அமைச்சர்கள் கடுமையாக அரசாங்கத்தையும், ஜனாதிபதியையும் தாக்கிப் பேசுவதை வன்மையாக விமர்சித்து தமது கருத்தைத் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக ஜே.வி.பியின் அமைச்சர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கமும், ஜனாதிபதியும் தேவையான உதவிகளை செய்யவில்லையெனக் கூறி அரசையும், ஜனாதிபதியையும் விமர்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கான

# முதல் மாதக் கொடுப்பனவு யாழ்.செயலகம் வந்தது!

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வழங்கும் திட்டத்துக்கு அமைய, ஒரு மாதத்துக்கான கொடுப்பனவு யாழ்.செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற செயலக கூட்டம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கை அரசாங்கம் யாழ். மாவட்ட கரையோரப் பகுதிகளில் 200 மீற்றருக்கு அப்பாலே மக்கள் குடியிருப்போ, கட்டடங்களோ அமைக்கவேண்டுமென கூறிவிட்டு, புதிய காவலரண்களை கரையோரப் பகுதிகளில் அமைத்து வருகிறது என இந்தக் கூட்டத்தில் பங்கேற்றோரால் விமர்சிக்கப்பட்டது.

கரையோரப் பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்கள் இடம்பெயர முடியாது என பலரும் தெரிவித்ததால் மேற்படி விடயங்கள் தொடர்பாக ஆராய்வதெனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சுனாமி அனர்த்தத்தில் சிக்கி இறந்தவர்களுக்கு 2 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மிகுதி 13 ஆயிரம் ரூபா வழங்கப்படும். புனரமைப்புப் பணிகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு அனைவரும் சிறப்பாக செயற்படுவது எனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட

# ஆசிரியர், மாணவர்கள் விண்ணப்பிக்க கோரிக்கை

சுனாமி அனர்த்தத்தில் சிக்கி மரணமடைந்த ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு முதற்கட்டமாக கல்வி அமைச்சின் ஊடாக ரூபா 5000 வழங்கப்படவுள்ளதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் மாகாசிவம் தெவித்தார்.

சுனாமி அனர்த்தத்தில் 31 ஆசிரியர்கள் இறந்துள்ளனர். இவர்களில் இரண்டு கல்விசார் ஊழியர்களும் அடங்குகின்றனர்.

இதை விட தமது குடும்பத்தில் உறுப்பினர்களை இழந்த ஆசிரியர்கள், வீடுகள் சொத்துக்களை முற்றாக இழந்த ஆசிரியர்கள், தாய், தந்தையை இழந்த பாடசாலை மாணவர்களுக்கு நிவாரணப் பணிகள் வழங்கப்படவுள்ளன.

எனவே, பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மாணவர்கள் த.மகாசிவம் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர், பெருந்தெரு விக்னேஸ்வரா வித்தியாலயம், திருகோணமலை என்னும் முகவரிக்கு தங்கள் விண்ணப்பத்தை உடன் அனுப்புமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

## அறிவித்தல்

சின்னராசா - விஜயகுமார் ஆகிய நான் 27.01.05 அன்று முகமாலை சென்று கொண்டிருந்த போது தலை சுற்று காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலை 10 ஆம் இலக்க விடுதியில் பொலிஸாரினால் அனுமதிக்கப்பட்டுள்ளேன்.

இத்தகவலை புத்தூர் மேற்கு கலைமதியை வசிப்பிடமாகக் கொண்ட எனது மனைவியான விஜயகுமார் சந்திரராணி, மகள் டிலக்சனா ஆகியோருக்கு இத்தகவலை வாசிப்பவர்கள் தெரியப்படுத்தவும்.

தகவல்
சி.விஜயகுமார்
வைத்தியசாலையில் இருந்து
(1046) 813495163 V

பொருளியல்
S. வரதராஜன்
B.A. (Hons)

தடைப்பட்ட பொருளியல் வகுப்புக்கள் அனைத்தும் 06-02-2005 தொடக்கம் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.

இயக்குநர்
S. வரதராஜன்
D.C.M.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.